gistered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 09 (30.04.2004) வெள்ளிக்கிழமை இதழ் :211

உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
மூலம்
தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
- வங்கிக்கணக்கு அவசியமில்லை
- கமிஷன் ஏதுமில்லை
- 365 நாட்களிலும் எந்நேரத்திலும்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk

சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472





## சமாதான பேச்சுக்கள் குறித்த

# அரசினது முடிவுகளினை அறிந்த பின்னரே புலிகளின் நிலைப்பாடு முன்வைக்கப்படும்!

### அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**மாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் து நோர்வேத் தூதுக்குழுவினர் எம்முடன் பேச்சுக்களை நடத்திய ர் தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகள் தெளிவாக முன்வைக்கப்படும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் தெரிவித்தார்.**

நொச்சியில் நேற்று போர் க் கண்காணிப்புக்குழுத் புறூவ் ஹொவ்டே தலை ன குழுவைச் சந்தித்துப் பின்னர் செய்தியாளர்கள் கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதில்கள் ு.

*கேள்வி:* பேச்சுவார்த்தை ப்பது தொடர்பாக ஜனாதி ந்திரிகா குமாரதுங்க கூறி ின்றார். எனவே எந்த அடிப் யான நிலைப்பாடுகளை அவர்கள் அறிந்து வந்து எம்மோடு பேசிய பின்னரே எமது தலைமைப்பீடத் தின் நிலைப்பாடுகளை தெளிவாக முன்வைப்போம்.

*கேள்வி:* மட்டக்களப்பில் நடந்த படுகொலை தொடர்பாக கண் காணிப்புக்குழு என்ன விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர்?

*பதில்:* மட்டக்களப்புச் சம்பவம் தொடர்பாக நாங்கள் கண்காணிப் புக் குழுவுக்கு எமது நிலைப்

கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வந்து தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ள நிலையில் தான் இச்சம்பவம் நடைபெற் றுள்ளது.

இச்சம்பவம் படைத்தரப்பின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா நேரடியாக தலையிடவேண்டும்!

### கதிர்காமர் நேரில் வேண்டுகோள்



(புதுடெல்கி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஷ்வந்த் சின்ஹாவிடம் கோரிக்கை விடுத்தார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் முதற்தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்த லக்ஷ்மன் கதிர்காமர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த பொதுமக்களின் வாழ்வை

ு.

ள்வி: பேச்சுவார்த்தை
ப்பது தொடர்பாக ஜனாதி
ந்திரிகா குமாரதுங்க கூறி
ின்றார். எனவே எந்த அடிப்
ில் பேச்சுவார்த்தையை
ப்பதற்கு தமிழீழ விடுதலைப்
தயாராக இருக்கின்றார்

ல்: இது பற்றிய கருத்துக்
இப்போது சொல்வது
த்தமில்லை. ஏனெனில்
வயின் தூதுக்குழு எங்க
சந்திக்கவுள்ளார்கள்.
சாங்கத் தரப்பின் உண்மை

ணைகளை மேற்கொண்டுள்ளனர்?

*பதில்:* மட்டக்களப்புச் சம்பவம் தொடர்பாக நாங்கள் கண்காணிப் புக் குழுவுக்கு எமது நிலைப் பாட்டை முன்வைத்திருக்கின்றோம்.

அதில் முக்கியமாக எங்களது தலைவரது கரிசனையையும், இயக் கத்தின் நிலைப்பாடுகளையும் அவர்களுக்குக் கூறியிருக்கின் றோம்.

அத்துடன்,எமது அதிருப்தி யையும் தெரிவித்திருக்கின்றோம். ஏனெனில், மட்டக்களப்புச் சம்பவ மானது நிச்சயமாக இராணுவக்

# இடம்பெயர்ந்த பொதுமக்களின் வாழ்வை புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்

## அரசு, புலிகளிடம் யு.என்.எச்.சி.ஆர் கோரிக்கை

இடம்பெயர்ந்துள்ள ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்க் கையை புதுப்பிக்கும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என அகதிகளுக் கான ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடமும் தமி ழீழ விடுதலைப்புலிகளிடமும் கோரி யுள்ளது.

சபையின் கண்காணிப்பாளரான டென்னிஸ் மெக்மாரா தமது இரு வார கால இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு பின்னர் ஊடக மாநாடு ஒன்றை நேற்றுக் கொழும் பில் நடத்தினார்.

இந்த மாநாட்டில் கருத்து வெளி யிட்ட போது அவர் தெரிவித்த தாவது-

மக்களின் ஸ்திரத்தன்மை இல் லாமல் ஒருகாலமும் சமாதானத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ார்நிறுத்த நடைமுறைகள் குறித்து

# ண்காணிப்புக்குழுத் தலைவர் மிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

ார்நிறுத்தக் கண்காணிப்புக்
ன் தலைவர் மேஜர் ஜென
ரொன் புறூவ்ஹொவ்டே
கிளிநொச்சியில் விடுதலைப்
ின் அரசியற்துறைப் பொறுப்
சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்
பேச்சு நடத்தினார்.
ற்றுக்காலை ஹெலிகொப்ரர்
கிளிநொச்சிக்கு வந்த போர்

நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, காலை 10.15 மணியள வில் சமாதான செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் பங்குபற்றி னார்.

காலை 11.30 மணிவரை - சுமா ஒரு மணிநேரமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் -

அரசாங்கம் மாறியுள்ள சூழலில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித் தும் -

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஏழு புலிகளின் படுகொலைகள் உள்ளிட்ட போர்நிறுத்த உடன்படிக் கையை சீராக அமுல்படுத்துவது தொடர்பான விடயங்கள் குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான வழிமுறைகளின் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## கதிர்காமரிடம் இந்தியா தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமாதான நடைமுறைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமரிடம் இந்தியா தெரிவித்ததாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜஸ்வந்த் சின்ஹாவுடன் கதிர்காமர் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அந்த அதிகாரி -

இலங்கை இனப்பிரச்சினைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
எக்ஸ்போஎயார்
EXPOAIR
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com

தொற்று நோய்கள் தொடர்பாக

# தனியார் மருத்துவமனைகளும் தகவல் தந்து உதவவேண்டும்!

## மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் பரவும் தொற்று நோய்கள் தொடர்பாக - தனியார் மருத்துவமனைகளும், தகவல் தந்து உதவவேண்டும் என யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.குடாநாட்டில் திடீர் திடீரென சில தொற்றுநோய்கள் பரவி வருவதும், பின்னர் அவை கட்டுப்படுத்தப்படுவதும் வழக்கம். இதற்கமைவாக கடந்த மாதம் டெங்குக் காய்ச்சல் பரவியபோது அது தொடர்பான விபரங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையூடாகக் கிடைத்தன.

இதனால் அந்த நோய் எமது முயற்சியால் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு யாழ்.போதான வைத்தியசாலையில் மட்டும் அனுமதிக்கப்பட்டு வரும் நோயாளர்கள் மற்றும் நோய்கள் தொடர்பான விபரங்கள் எமக்கு கிடைத்து அதன்பின்னர் நாம் நடவடிக்கை எடுப்பதே வழக்கமாகியுள்ளது.

எனினும், தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்று நோயாளர்கள் பற்றியோ, நோய் பரவுவது பற்றியோ முழுமையான விபரங்களை எமக்குத் தந்துதவுவதில், தனியார் வைத்தியசாலை மருத்துவர்கள் ஒத்துழைப்பதில்லை.

அவர்களின் ஒத்துழைப்பும் இருந்தால் பல வகையான நோய்களையும் தடுக்கக்கூடியதாக இருக்கும். தனியார் மருத்துவமனையின் வைத்தியர்கள் இத் தகவல்களை வழங்கி ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

சில வெளியில் சொல்லமுடியாத நோய்கள்கூட முதலில் வெளிப்படுத்தப்படுவது தனியார் மருத்துவமனைகளிலேயே ஆகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேதினத்தை தமிழ் மக்களின்

# எழுச்சி நாளாக மலரவைப்பது தமிழ் மக்களின் கடமையாகும்

யாழ். வர்த்தக சம்மேளனம் அறிக்கை

மேதினத்தை தமிழ்மக்களின் எழுச்சி நாளாக மலரவைப்பது ஒவ்வொரு தமிழ் மக்களினதும் கடமை என்பதால் எதிர்வரும் மேதினத்தன்று வீரசிங்கம் மண்டபத்தில் அனைத்துத் தொழிலாளர்களும் அலை அலையாகத் திரண்டு பங்குபற்றி தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கு வித்திடுவோம் என யாழ். வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் வெளியிட்டுள்ள மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அச்செய்திக் குறிப்பில் இவ்வருட மேதினம் தமிழ் மக்களின் விடுதலையின் எழுச்சி தினமாக மலரவேண்டும். குறிப்பாக இவ்வாண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் தமது விடிவை நோக்கி தமது ஆணையை வழங்கியுள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில் தமிழினம் பட்ட வேதனைகளும், சோதனைகளும் உலகுக்கு அம்பலப்படுத்தப்பட, தேர்தல் ஒரு படிக்கல்லாக அமைந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் வெளியிட்ட மேதினச் செய்தியில் - உலகமெங்கும் அனுஷ்டிக்கப்படும் இந்த மேதினத்தில் தமிழ் மக்களாகிய நாம் சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றோம். தற்போதைய சமாதான சூழலில் அரசாங்கத்தோடு எமது அபிலாஷையாகிய தன்னாட்சி அதிகாரங்களுக்காக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில் எமது மக்களின் உரிமைகளை உலகத்துக்கு எடுத்துச்சொல்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொருளியற் கருத்தரங்கு

நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் - பொருளியல் பாடத்திற்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு, ஒன்று நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.கனகரத்தினம் (ஸ்ரான்லிக் கல்லூரி) மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கு பாடசாலை அதிபர் வி.மாணிககம் தலைமையில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கினை ஆசிரியர் வே.கருணாகரன் நிகழ்த்தவுள்ளார்.

# வாக்குப்பதிவு முடிவடைந்ததும் முடிவை அறிவித்த அதிகாரி!

ஜார்க்கண்ட் மாநிலத்தில் வாக்குச்சாவடி அதிகாரி ஒருவர் வாக்குப் பதிவு முடிவடைந்ததும் வாக்குகளைக் கணக்கிட்டு உடனடியாக தேர்தல் முடிவை அறிவித்துவிட்டார்.

ஜார்க்கண்ட் மாநிலம் லோகர்கடா நாடாளுமன்ற தொகுதியில் கடந்த 26 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது. இந்தத் தொகுதிக்கு உட்பட்ட யுர்ஹி தொடக்கப் பள்ளிக்கூட வாக்குச்சாவடியில் மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடைந்தது. நாடு முழுவதும் அனைத்துக்கட்ட வாக்குப்பதிவும் முடிவடைந்த பிறகு மே 13 ஆம் திகதி தான் வாக்குகள் எண்ணி அறிவிக்கபடவேண்டும். ஆனால் 'அவசரக் குடுக்கை' அதிகாரியான அவருக்கு அதுவரை பொறுத்திருக்க முடியவில்லைபோலும். வாக்குப்பதிவு முடிந்தவுடன் இயந்திரத்தில் வாக்குகளை சரிபார்த்து முடிவை அறிவித்துவிட்டார்.

### ஆந்திராவில் நடந்த புறா பந்தயம்

ஆந்திராவில் இந்த ஆண்டுக்கான புறா பந்தயம் நடந்தது. ஆந்திர மாநிலம் காவாளி என்ற இடத்திலிருந்து மதுரை வரை பறக்கும் இப் பந்தயத்தில் ஆந்திராவிலிருந்து மதுரைக்கு 700 கி.மீ தூரத்தை 19 மணி நேரத்தில் கடந்து மதுரை புறா சம்பியன் பட்டத்தை பெற்றது.

இதில் மதுரை உட்பட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த புறாக்கள் கலந்துகொண்டன.

# மோசமாக சேதமடைந்துள்ள மீசாலை - புத்தூர் சந்தி வீதி

(யாழ்ப்பாணம்)

மீசாலை - புத்தூர் சந்தி தொடக்கம் கனகன்புளியடி சந்தி வரையான பகுதி வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வீதியானது கடந்த பல வருடங்களாக பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த வீதியைச் செப்பனிடுவதற்கென கடந்தவருடம் கற்கள் பறிக்கப்பட்டபோதும், இதுவரை வீதி திருத்தப்படாததால் இவ்வீதியைப் பாவிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவ்வீதியின் ஊடாக 794 ஆம் இலக்க போக்குவரத்து சபை பஸ்களும், தனியார் மினி பஸ்களும் பயணிக்கின்ற போதிலும் இவ்வீதி பல வருடங்களாகத் திருத்தப்படவில்லை.

கடந்த வருடம் பறிக்கப்பட்ட கற்களும் சிதைவடைந்து வருகின்றது. எனவே, இவ்வீதியைக் கூடிய விரைவில் திருத்தி, மக்களின் அசௌகரியங்களை நீக்கி சுமுகமான போக்குவரத்தினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (25)

### வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக் கழக புவியியற்துறை மண்டபத்தில் தமிழ் துணைத் தலைப்புக்களுடன் கூடிய ரஷ்ய மொழித் திரைப்படமான 'லரீஷா' காண்பிக்கப்படவுள்ளது.

இந்தப் படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதர் மற்றும் விமர்சகர் ஏ.ஜே.கனகரத்தினா ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் கலந்துரையாடலும் நடைபெறும்.

### ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு, சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் இன்று பி.ப 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'இந்துமதம் காட்டும் ஆன்மீகம்' என்னும் கருப்பொருளில் ஆசிரியர் பாமா உதயகுமார் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பி.ப 4 மணி முதல் 5.30 மணிவரை தேவார இசைமணி இரா.திருஞான சம்பந்தன் அவர்களால் பண்ணிசை வகுப்பு நடத்தப்படுகின்றது. விரும்பியர்கள் பங்குபற்றி பயனடைய முடியுமென இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவி செல்வி இரகுநாதன் எழிலினியின் 786322030V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 11.04.2004 இல் யாழ். நகரில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் நா.இரகுநாதன் 100/2, சம்பியன் லேன், கொக்குவில் என்ற விலாசத்தில் அல்லது விலைமதிப்பு திணைக்களத்தில் (யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடம்) ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (726)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும் ரஜினி, மீனா நடித்த முத்து
நாளை முதல்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, விவேக் நடித்த
அருள் (ரீல்ஸ்)

ஆசனப் பதிவுகளுக்கு - நாகம்ஸ் பாட்டா - சுன்னாகம்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர்.(இருவேடம்), லதா, மஞ்சுளா, நம்பியார் நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Do not Disturp
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30,2.30,6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

...management learning for tomorrow's business
எதிர்கால வணிகத்திற்கான முகாமைத்துவக் கற்கைநெறி
your opportunity to become a graduate

DAIDO YAMATO மோட்டார் சைக்கிளுடன்
இலவசம்

**...management learning for tomorrow's business**

எதிர்கால வணிகத்திற்கான
முகாமைத்துவக் கற்கைநெறி

your opportunity to become a graduate
by the age of 20 years

20 வயதில் பட்டதாரியாகும் சந்தர்ப்பத்தைப் பெறுவதற்கு அரிய வாய்ப்பு

abe

**Association of Business Executives-UK**

வணிக மேலாண்ணை குழு - இங்கிலாந்து

**Fastest route to MBA**

certificate & Diploma Courses commencing on 10th May 2004

விரைவாக வணிக மேலாண்மையில் பட்டம்பெற அரிய வாய்ப்பு
வணிக நிர்வாகத்துறையில் புலமையடைவதற்கு பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

மே மாதம் 10 ஆம் திகதி தொடக்கம்

**Business Administration**
**Business Information Systems**
**வணிக நிர்வாகம்**
**வணிக தகவல் முறைகள்**

IELTS
Spoken English } Conducted by British qualified experienced lecturers in English

பேசுவதற்கான ஆங்கிலம் - பிரித்தானியாவில் பயிற்சி பெற்ற
அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள்

Visit us for more details
மேலதிக விபரங்களுக்கு

(சீ/2484)

UNIVENTURES
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
16 Kandappah Segaram Road,
Jaffna. Tel: 021 2227666

UNIVENTURES
வணிக மேலாண்மை கல்லூரி
(K.K.S. வீதி,
ப.நோ.கூ. சங்க கட்டடம் முன்பாக)
16, கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 7666



**DAIDO YAMATO** மோட்டார் சைக்கிளுடன்

இலவசம்

ஒவ்வொரு கொள்வனவின்போது
1 தலைக்கவசம்
1 மழையங்கி (ஜகட்)



ஜப்பானிய
உதிரிப்பாகங்களுக்கும்
பொருந்தும்.

நாடு பூராகவும் உள்ள
அங்கிகாரம் பெற்ற
முகவர்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்

புத்தம் புதிய மோட்டார்
சைக்கிள் பிறப்பிலே
முன்னணியில்.

ஸ்போக் அல்லது அலோய்வீல்ஸ், கவரக்கூடிய வர்ணங்களிலும், நவீன மொடல்களிலும்,
3 சேவிஸ்கள் இலவசம், 12 வி பற்றரி, 4இஸ்ட்ரோக் இன்ஜின்/உத்தரவாதத்துடன் 70CC
இருந்து மேலாக டய்டோஇன்ஜின், லீற்றருக்கு 50-75 கிலோமீற்றர் (ஓட்டத்திறனுக்கேற்ப),
கிக் மற்றும் செல்ப் ஸ்ரார்ட்

**ஏக வினியோகஸ்தர்கள்**

**செரெண்டிப் மோட்டார் என்ரர்பிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**

60 B ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு -10

தொலைபேசி: 011 2341580-1, 2438779 பக்ஸ்: 011-2454608, 2438425 E-mail: zme@sltlk

# ஓடச்சொல்லி விட்டு எம்மீது அதிரடிப்படையினர் சுட்டனர்!

## 17 வருடங்களின் பின் விடுதலையானவர் முறைப்பாடு

என்னை ஓடச்சொல்லிவிட்டு சுட்டுக்காயப் படுத்திய விசேட அதிரடிப்படையினர் 18 ஆண்டு களாகக் கொத்தடிமைபோல் நடத்தினர் என-

18 வருடங்களுக்கு முன் காணாமல்போய், அவர் இறந்துவிட்டதாக வீட்டார் கருதிக் கொண்டிருக்கையில், மூன்று நாட்களுக்குமுன் வீடுதிரும்பிய மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த கனகரட்ணம் சண்முகநாதன் தெரிவித் தார்.

தன்மீது புரியப்பட்ட அநீதி குறித்து மனித உரிமைகள் ஆணைகுழுவிற்கு அவர் வழங் கிய முறைப்பாட்டிலேயே இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரி வித்திருப்பதாவது -

1987 ஆம் ஆண்டு சித்தாண்டிக்குடிக்கு தொழில் நிமித்தம் சென்ற என்னை, விடுத லைப் புலிகள் உறுப்பினர் எனக்கூறி விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்தனர்.

என்னுடன் மேலும் 15 பேர்வரையில் கைது செய்யப்பட்டனர். எங்களை அம்பாறைக் காட் டுப்பகுதிக்கு அழைத்துச் சென்ற விசேட அதி ரடிப்படையினர் - எம்மை ஓடச்சொல்லி விட்டுச் சுட்டனர். அவ்வேளை என்னுடன் ஓடிய மற்ற வர்கள் இறந்துவிட்டனர்.

எனினும், எனது காலில் துப்பாக்கிச் சன்னம்பட்டு காயம் ஏற்பட்டதால் நான் வீழ்ந்து மயங்கிவிட்டேன்.

பின்னர் விழித்துப் பார்த்தபோது, விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்தேன்.

எனது கால் குணமடைந்ததும் என்னை ஒரு இராணுவ முகாமில் கொத்தடிமைபோல் பணிவிடையாற்ற விட்டனர்.

நான் அங்கு பெரும் சிரமப்பட்டு, அவர்க ளுக்கு சமையல் முதல் கழிப்பறைச் சுத்திக ரிப்பு ஈறாக அனைத்துப் பணிகளையும் ஆற்றி னேன்.

என்னை விட்டுவிடுமாறு எத்தனையோ தடவைகள் கெஞ்சினேன். ஆனால், அவர்கள் என் வேண்டுகோளை ஏற்கவில்லை.

17 வருடங்களின் பின், கடந்த வாரம் அந்த இராணுவ முகாமிற்குப் புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட ஒருவர் - அங்கு கொத்தடி மைகள் போல் பணியாற்றி வந்த சுமார் 10 இற்கும் மேற்பட்ட தமிழர்களாகிய எம்மை வீடுகளுக்குச் செல்லுமாறு கூறி அனுப்பிவைத் தார் என அவர் தனது முறைப்பாட்டில் தெரி வித்துள்ளார்.

# இலங்கையருக்குப் பயிர்சியளிக்க மலேசிய அரசாங்கம் முன்வந்தது!

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெறவி ரும்பும் இலங்கையர்களுக்குப் பயிற்சியளிக்க மலேசியா முன்வந்துள்ளது.

இலங்கையர்களை மலேசியாவுக்கு அனுப் பும் தற்போதைய திட்டத்திற்கமைவாகவே இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது. இதன்மூலம் இலங்கை யிலுள்ள - வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கு அதிக நன்மை கிடைக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது.

# பொலிஸாருக்கான பதவியுயர்வுகள்; உடன் வழங்குமாறு சந்திரிகா பணிப்பு!

(கொழும்பு)

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலி ஸாருக்கான பதவியுயர்வுகளை உடன் வழங்கு மாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத் தரவிட்டுள்ளார். பொதுமக்கள் பாதுகாப்பு, சட்ட ஒழுங்கமைப்பின் செயலாளர் திலக் ரண விராஜா, சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்கள் ஆகியோருடன் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலின் பின்னரே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதன்மூலம் அதிக எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் பயனடையவுள்ளனரென பொலிஸ் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இந்தப் பதவியுயர்வுகள் பாரபட்ச மற்ற முறை யில் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு; அடுத்த மாதம் அரசு நடவடிக்கை

## நிதியமைச்சர் தகவல்

நாட்டில் உள்ள அனைத்துப் பட்டதாரிக ளுக்கும் வேலை வழங்கும் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தி ருப்பதாவது -

இலங்கையில் உள்ள 27 ஆயிரம் வேலை யற்ற பட்டதாரிகளுக்கும் முதலில் இரண்டு வரு டங்களுக்கு முகாமைத்துவப் பயிற்சி அளிக்கப் படவுள்ளது.

இக்காலப் பகுதிகளில் இவர்களுக்கு மாதம் ஆறாயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது. இதன் பின்னர் அவர்களுக்கு அரச துறைக ளில் வேலை வழங்கப்பட ஏற்பாடு செய்யப் படும்.

இதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கல் தொடர் பான விண்ணப்பப் படிவம் அடுத்த மாதம் பத்தி ரிகைகளில் பிரசுரிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# லஞ்சம் வாங்கிய இன்ஸ்பெக்டருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனை!

(கொழும்பு)

லஞ்சம் வாங்கிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு இரண்டாண்டுகால கடூழியச் சிறைத தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விதித்தது.

குற்றவாளிகளிடம் லஞ்சமாகப் பணம் பெற் றுக்கொண்ட பொலிஸ் அதிகாரி - அவர்களின் வழக்குகளை நீதிமன்றத்தில் பாரப்படுத்தத் தவறியமைக்காகவே இந்தத் தண்டனை விதிக் கப்பட்டது.

இவருக்கு லஞ்சம் வழங்கியதாகக் கருதப் படும் நபர்களுக்கும் தண்டப் பணம் செலுத்து மாறு உத்தரவிடப்பட்டது.

ருவான்வெல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய குறிப்பிட்ட பொலிஸ் இன்ஸ் பெக்டர் குறித்து லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்தே அவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டார்.

தனது குற்றங்களை அவர் ஒப்புக்கொண் டதை அடுத்தே, மேற்படி தண்டனை வழங்கப் பட்டது.

## இந்திய மீனவர் அத்துமீறல்

# மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தமிழக அதிகாரிகளிடம் முறையிடுவர்

(கொழும்பு)

வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்து மீறி மீன்பிடிப்பது குறித்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இந்திய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்த தவுள்ளனர்.

மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர்களின் அபி விருத்தி குறித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத் தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைககலநாதன், சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால், மீன் வளங்கள் அழிந்து வருவதாகவும், இவர்களின் இந்த நடவடிக் கையால் தொழில் பாதிப்படைந்து வருவதாகவும் இந் தக் கூட்டத்தில் மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீனவர்களின் அத்து மீறல்கள் குறித்து இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய மீனவர் சங்கப் பிரதி நிதிகள் செல்லவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரி வித்தார். (201)



பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு பிரிவுக்கு புதிதாக நியமனமான அதிகாரி லெப். கேணல் சி.பி.ஜி. மார்ட்டின் இடமாற்றம் பெற்றுச்செல்லும் லெப்.கேணல் எம்.எச்.டி.டபிள்யு.வெல்டன் ஆகியோர் இராணுவ தலைமையகத்தில் பாதுகாப்பு தலைமை அதிகாரியான லெப். ஜெனரல் லயனல் பலகல்லவைச் சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# பாதாள உலகக் குழுவின் 9 உறுப்பினர்கள் கைது!

(கொழும்பு)

கொழும்பு - மீரிஹான பிரதேசத்தில் இடம் பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர் புடைய ஒன்பது பேர் நுகேகொட பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த வர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஒன்பது பேரே கைதுசெய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரி வித்தனர்.

கடந்த 26, 27 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களுடன் இவர்களுககுத் தொடர்பிருப்ப தாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி யையும் நூறிற்கு மேற்பட்ட துப்பாக்கி ரவைக ளையும் தாம் கைப்பற்றியிருப்பதாக நுகே கொட பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசியப் பட்டியல் எம்.பிக்களில் மூன்று பேர் இராஜினாமா

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான ஜனதாஸ பீரிஸ், மேரி லுசிடா, பீ.சீ.வீர சேகரா ஆகியோர் இராஜினாமாச் செய்துள்ள னர்.

இவர்கள், தமது இராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளரிடம் நேற்றுமுன்தினம் கையளித்தனர்.

முன்னாள் பிரதமர் இரட்னசிறி விக்கிர மநாயக்க, மேர்வின் சில்வா, நீதிபதி ஜெயம் பதி விக்கிரமநாயக்க ஆகியோரை நாடாளு மன்றத்திற்கு அனுமதிக்கும் வகையில், ஜனாபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவிடுத்துள்ள வேண்டுகோளின் படியே இவர்கள் தமது பதவியிலிருந்து இராஜினா மாச் செய்துள்ளனர்.

## கிளிநொச்சி மாவட்ட

# அத்தியாவசியத் தேவைகள் குறித்து திட்டமிடல் கூட்டத்தில் ஆராய்வு

கிளிநொச்சி மாவட்டத் திட்டமிடல் அத்தியாவசிய தேவைகள் தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அரசசெயலகத்தில் அரச அதிபர் இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை நடந்த இந்தக் கூட்டத்தில் சகல பிரிவுகளின் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக்குடி யேறியுள்ளதனால் அவர்களுக்கான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாக அரச அதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில் -

இந்த வீடமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க கணிசமானளவு நிதி கிடைத்துள்ளது. அத்துடன் வீடமைப்பு அதிகாரசபை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்திவருகின்றோம்.

அத்துடன், 7000 வீடுகளை அமைக்க உலக வங்கி நிதி தருவதாக உறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்தகால போரினால் கிளிநொச்சி மாவட்டம் பெரும் அழிவுகளை சந்தித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (03)

## வீரர்கள் மீது மருத்துவ பரிசோதனை

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீது குற்றஞ்சாட்டுகிறார் இம்ரான்கான்



"இந்திய அணிக்கெதிரான தொடர் தோல்விகளுக்கான உண்மையான காரணங்களை ஆய்வுசெய்வதைவிடுத்து, அணியின் வீரர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப் போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்திருப்பது மாபெரும் கேலிக் கூத்து" என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இம்ரான்கான், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைச் சாடியிருக்கிறார்.

பாகிஸ்தான் அணியின் வீரர்கள் சிலரை மருத்துவ பரிசோதனைக்கு ஆஜராகுமாறு அந்த நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதையடுத்தே, இம்ரான்கான் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சென்ற வருடக் கடைசியில் இந்திய அணி அவுஸ்ரேலியா சென்று ஆடியது. அப்போது அவுஸ்ரேலிய வீரர்களான மெக்ராத், பிரட்லீ, ஜேசன் கிலெஸ்பி ஆகியோர் காயமடைந்தார்கள். அதற்காக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை விசாரணைக் குழுவை நியமித்ததா?

அதேபோல இந்தத் தொடரில் இந்திய அணி வீரர்களில் சௌரவ் கங்கூலி, ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோர் காயமடைந்து சில போட்டிகளில் ஆடவில்லைத்தான். அவர்கள் முதலிலேயே அரைகுறை உடற் தகுதியோடு வந்தார்களா என்று இந்திய கிரிக்கெட் சபை-மருத்துவர்கள் அடங்கிய விசாரணைக் குழுவையா நியமித்திருக்கிறது?

தொடர் தோல்விகளுக்கான உண்மையான காரணங்களை ஒழுங்காக ஆய்வு செய்வதை விடுத்து, மருத்துவர்களின் முன்பு ஆஜராகி நம்பகத் தன்மையை நிரூபிக்க வேண்டும் என்று வீரர்களைக் கட்டாயப் படுத்துவது என்பது உலகிலேயே முதல் முறையாக பாகிஸ்தானில்தான் நடந்து கொணடிருக்கிறது. இது மாபெரும் கேலிக்கூத்தாக இருக்கிறது' என்று இம்ரான்கான் கடுமையாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

"வேகப்பந்து வீச்சாளர்கள் காயப்படுவதென்பது வழக்கமாக நிகழக்கூடிய ஒன்றுதான். ராவல்பிண்டியில் அக்தரால் மூன்றாவது நாளில் பந்துவீச முடியவில்லை என்பதற்காக, அவரை ஒரேயடியாக விசாரணை செய்து துன்புறுத்துகிறார்கள். அப்படியானால் அணியின் வெற்றிக்கு அவர் ஒருவரைத்தான் நம்பியிருந்தார்களா? மற்ற வீரர்கள் எல்லாம் என்ன செய்துகொண்டிருந்தார்கள்.

அதற்கு முன்னர் பாகிஸ்தான் அணி ஆடிய மூன்று தொடர்களில் அக்தர் தனது சிறப்பான பந்து வீச்சினால், பாகிஸ்தானுக்கு வெற்றிதேடித் தந்திருக்கிறார் என்பதை மறந்துவிட்டு, இப்போது அவரை மட்டும் குறிவைக்கிறார்கள்" என்றும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் மீது இம்ரான்கான் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

## வீரர்கள் கௌரவிப்பு

(மட்டுவில்)

2004 ஆம் ஆண்டு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில், சிறந்து விளங்கிய தென் மட்டுவில் கதிரொளி விளையாட்டுக் கழக விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு, எதிர்வரும் மூன்றாம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கதிரொளி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கே.வி.சிவனேசன் (அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம் கைதடி), சிறப்பு விருந்தினர்களாக க.பாலசுப்பிரமணியம் (ஆளணி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தென்மராட்சி), பொன்.ஸ்ரீவாமதேவன் (ஆசிரியர், மகளிர் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் பாராட்டுரைகளும் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில்கள் வழங்குதலும் இடம்பெறும். (24)

# மரடோனாவின் உடல்நிலை முன்னேற்றமடைந்து வருகிறது



## ரசிகர்களுக்கும் நன்றி தெரிவித்தார்

(பியூனஸ்)

மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும் கால்பந்து கதாநாயகன் மரடோனாவின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தன்மீது அன்பு காட்டிய ரசிகர்களுக்கு மரடோனா நன்றி தெரிவித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டில் உலக கோப்பை கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்ற ஆர்ஜென்ரீனா அணியின் அணித்தலைவராக இருந்தவர் மரடோனா.

மரடோனா கால்பந்து ஆட்டத்தில் அனைவரையும் கவர்ந்த கதாநாயகனாக விளங்கினார். 43 வயதான மரடோனா கடந்த 18 ஆம் திகதி உள்ளூர் கால்பந்து ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் ஆர்ஜென்ரீனாவில் உள்ள பியூனஸ் அயர்சில் உள்ள ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். முதலில் அவரது உடல் நிலை கவலைக்கிடமாக இருந்தது.

பத்துநாள் சிகிச்சைக்குப்பிறகு மரடோனா உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. செயற்கைச் சுவாச உதவி இன்றி அவர் சுவாசிக்கிறார். குடும்பத்தினருடன் சிரித்துப் பேசிய அவர் திரவ உணவுவகைகளைச் சாப்பிடுகிறார்.

இந்த நிலையில் தனக்கு ஆதரவும், பரிவும், பாசமும் காட்டிய ரசிகர்களுக்கு மரடோனா நன்றி தெரிவித்தார். அத்தோடு மொராக்கோ போட்டியில் விளையாடும் ஆர்ஜென்ரீனா கால்பந்து அணிக்கும் அவர் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

விளையாட்டு

# ஒட்டுமொத்த முயற்சியே வெற்றிக்கு காரணமாகும்



## மஹேல ஜெயவர்த்தன தெரிவிப்பு

(ஹராரே)

"அணியின் ஒட்டுமொத்த முயற்சியே வெற்றிக்குக் கரணம்" என்று இலங்கை அணியின் தற்காலிக அணித்தலைவராகப் பொறுப்பேற்ற மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்

ஹராரேயில் நடைபெற்ற சிம்பாப்வே அணிக்கு எதிரான நாலாவது ஒரு நாள் டெஸ்ட் போட்டியில் - இலங்கை அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. 5 போட்டிகள் கொண்ட இந்த நடப்பு ஒரு நாள் தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் இலங்கை அணி வென்று ஏற்கனவே தொடரைக்கைப்பற்றி விட்டது.

ஹராரேயில் நடைபெற்ற 4 ஆவது ஒரு நாள் போட்டியின் போது இலங்கையின் முக்கிய வீரர்களான சனத் ஜெயசூரிய, மாவன் அத்தப்பத்து, சமிந்தவாஸ் மற்றும் முத்தையா முரளீதரன் ஆகியோர் ஓய்வெடுத்துக் கொண்டனர். அணியின் தற்காலிக அணித்தலைவராக மஹேல ஜெயவர்த்தன பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஆட்டம் முடிவடைந்த பின்னர் ஜெயவர்த்தன தெரிவித்ததாவது-

"எங்கள் வீரர்கள் சிறப்பாக ஆடினார்கள். இந்த வெற்றியில் எங்கள் அணியின் ஒவ்வொரு வீரருக்கும் பங்குண்டு. ஒரு அணியாக செயல்பட்டு நாங்கள் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். எனவே, அணியின் ஒட்டுமொத்த முயற்சியே இந்த வெற்றிக்குக் காரணம்" எனக் குறிப்பிட்டார்.

ஆடுகளம் பொதுவாக சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக விளங்கியது என்றும், 20 ஓவர்களுக்குப் பிறகு இரண்டு அணிகளுமே சுழற்பந்து வீச்சைத்தான் திருப்புமுனையாக நம்பின என்றும், மந்தமான ஆடுகளமாக விளங்கியதால் இலங்கை வீரர்களாலும் எதிர்பார்த்தளவு ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை என்றும் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

"எங்கள் அணியின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. பன்யாங்கரா மற்றும் டக்ளஸ் ஹொண்டோ ஆகியோர் எதிர்பார்த்ததிற்கும் மேலாக சிறப்பாகப் பந்து வீசினார்கள். மேலும் எங்கள் அணியின் களத்தடுப்பும் சிறப்பாக இருந்தது. துடுப்பாட்டத்தில் இப்ராஹிம் ஒருவர்தான் நன்றாக ஆடினார்" என்று சிம்பாப்வே அணித்தலைவர் தைபு தெரிவித்தார்.

# சிறப்பாக நடந்துமுடிந்த வலைப்பந்தாட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையினரின் ஆதரவில் வட அல்வை இளங்கோ விளையாட்டுக்கழகம் நடாத்திய மின்னொளியிலான, வீரவேங்கை காவேரி ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நாள் ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை பி.ப 5.30 மணிக்கு ஆரம்பமாகியது.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கி.பாப்பா தேசியக்கொடியினை ஏற்றிவைக்க, இளங்கோ சனசமூக நிலையத்தின் போசகர் மு.அநாதரட்சகன் நிலையக்கொடியினை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அகவணக்கம், வீரவேங்கை காவேரியின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தல் என்பன இடம்பெற்ற பின் காட்சிப் போட்டி ஆரம்பமாகியது. இந்தப் போட்டியில் அல்வாய் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டி வெற்றி தோல்வயின்றி முடிவடைந்தது.

பின்னர் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொமேஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் வதிரி பொமேஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி மூன்றாம் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இறுதிப் போட்டியில் - அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டி ஆரம்பமாகியதும் வான வேடிக்கைகள் வானத்தை அழகுபடுத்தின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தையும் நான்கு அடி உயரமுள்ள சுற்றுக் கிண்ணத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

இந்தப் போட்டியின் சிறந்த சூட்டராக செல்வி யோ.றபேக்காவும், தொடர் நாயகியாக யாழ்ப்பாண விளையாட்டுக் கழக அணித்தலைவி யோ.றெமின்ராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மேசைப்பந்து போட்டி

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயத்தின் பட்மின்ரன், மேசைப்பந்துப் போட்டிகள் இன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும். இந்தப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வை வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தொடக்கி வைப்பார். (101)

## உடற்பயிற்சிப் போட்டி

(உடுவில்)

சங்கானை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று காலை 9.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ப.யோகராஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (101)

# மருத்துவக் குழு முன் அக்தர் ஆஜர்



இந்தியாவுக்கு எதிரான தொடரில் பாகிஸ்தான் வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் உண்மைதானா? என்பதைக் கண்டறிய அமைக்கப்பட்ட மருத்துவக்குழு முன் சொவைப் அக்தர் நேற்று முன்தினம் ஆஜரானார். அவருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப் பட்டது.

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டியில் விளையாடியது. இதில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

பாகிஸ்தான் சொந்த மண்ணில் இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவியது, அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

4 ஆவது ஒருநாள் போட்டி முடிவுக்கு, சூதாட்டமே காரணம் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் ரஷீத் லத்தீப் கூறிய குற்றச்சாட்டு விஸ்வரூபம் எடுத்து கிரிக்கெட் சபை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான கடைசி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி மோசமான தோல்வியைத் தழுவியது, புதிய புயலைக் கிளப்பியுள்ளது. அந்தப் போட்டியில் 2 ஆவது நாள் பந்து வீசுகையில் கீழேவிழுந்த சொகைப் அக்தர் ஆட்டத்திலிருந்து வெளியேறினார். 3 ஆவது நாள் பந்து வீசாத அவர் 4 ஆவது நாள் அபாரமாகத் துடுப்பாட்டம் செய்தார்.

அக்தருக்கு ஏற்பட்ட காயம் உண்மையானதா? என்பது சந்தேகமாக இருப்பதாக அணித் தலைவர் இன்ஸமாம் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார். மற்றும் உமர்குல், அப்துல் ரசாக், மொயின்கான், சபீர் அகமட் ஆகியோரும் காயம் காரணமாக டெஸ்ட்தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் கடைசி டெஸ்ட்டில் விளையாடவில்லை.

ஸ்கேன் செய்துபார்த்தபோது அக்தருக்குக் காயம் பெரிய அளவில் இல்லை என்று தெரியவந்தது. இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் உண்மைதானா என்பதைக் கண்டறிய 4 பேர் கொண்ட மருத்துவக் குழுவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்தது.

மருத்துவக்குழு முன் ஏற்கனவே உமர்குல் ஆஜராகி விளக்கமளித்தார். இங்கிலாந்து கவுண்டி கிளப்பில் விளையாட லண்டன் சென்றுள்ள சபீர் அகமட் தனது மருத்து அறிக்கையை கிரிக்கெட் சபையிடம் தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர், சகல துறைவீரர் அப்துல் ரசாக், விக்கெட் கீப்பர் மொயின்கான் ஆகியோர் மருத்துவக் குழுவின் விசாரணைக்கு நேற்றுமுன்தினம் ஆஜரானார்கள். காயம் குறித்துத் தேவையான மருத்துவ பரிசோதனைகள் அவர்களிடம் நடத்தப்பட்டது.

மருத்துவ அறிக்கை முடிவுகள் தெரிந்த பிறகு வீரர்கள் மீதான நடவடிக்கை குறித்துப் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை முடிவுசெய்யும்.

'தனக்கு கைவிரல் மட்டுமன்றி முதுகுப் பகுதியிலும் காயம் ஏற்பட்டதால் பந்து வீசவில்லை. வேண்டுமென்றே ஆட்டத்தைப் புறக்கணிக்கவில்லை' என்று சொகைப் அக்தர் கூறியுள்ளார்.

# அரியாலையில் கோஷ்டி மோதல்
# வீடுகள், கடைகள் சேதமாக்கப்பட்டன

(அரியாலை)

அரியாலைப் பகுதியில், காந்தி சனசமூக நிலையத்தினை அண்டியுள்ள பகுதியில் உள்ளவர்களுக்கும், நாயன்மார்கட்டுப் பகுதியில் உள்ளவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலவரம் நேற்றுமுன் தினமும் தொடர்ந்து இடம்பெற்றது.

ஆண்டு விழாவில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக ஏற்பட்ட கலவரம், தற்போது மோசமடைந்து காணப்படுகின்றது. இரு பகுதியில் உள்ளவர்களும் பெருமெடுப்பில் வாள், கத்தி, தடிகள் போன்றவற்றோடு தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

கல்வீச்சு, போத்தல் வீச்சு, என்பனவும் சரமாரியாக இடம்பெறுவதோடு, பெற்றோல் குண்டுவீச்சுச் சம்பவங்களும் அவவப்போது இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் நாயன்மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த சிலர் - அரியாலை ஆசிர்வாதப்பர் கோயிலடியிலுள்ள இரு வீடுகளைக் கல்வீசி சேதப்படுத்தியதைத் தொடர்ந்து, அரியாலை காந்தி சனசமூக நிலையத்துக்கு அருகிலுள்ளவர்கள் - கத்தி, வாள், தடிகள் என்பவற்றுடன் சென்று திருமகள் வீதிக்கும் கனகரட்ணம் வீதிக்கும் இடையிலுள்ள சந்தியில் அமைந்திருந்த விடியோக்கடையை அடித்து நொருங்கியதுடன், அங்கிருந்த விடியோக் கசட்டுக்கள் சிலவற்றையும், இரண்டு சைக்கிள்களையும் சேதப்படுத்தி, அந்தச் சைக்கிள்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அரியாலை கலைமகள் வீதியிலுள்ள இரு வீடுகளையும், அங்கிருந்த சில பொருட்களையும் சேதப்படுத்தினர்.

மேலும், நான்கு வீடுகளின் வெளிக் கேற்றுக்களையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 2 மணிக்கு மேலாகவும் தொடர்ந்த இந்தச் சம்பவங்கள் - நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் மீண்டும் நாயன்மார்கட்டுப் பகுதியிலுள்ள சில இளைஞர்கள் - அரியாலை காந்தி சனசமூகநிலையத்தை அண்டியுள்ள ஒருவரைத் தாக்கியதையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் நில்வியது. இந்நச் சம்பவத்தின்போது ஓட்டோ ஒன்றின் பின்புறக் கண்ணாடி சேதமாக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் நேற்றுமுன் தினம் காலை 6 மணியளவில் அரியாலை கனகரட்ணம் வீதி - திருமகள் வீதிச் சந்தியில் நாயன்மார் கட்டுப்பகுதி இளைஞர்கள் சிலர் இரண்டு சைக்கிள்களைத் தாக்கி எரித்துள்ளதைத் தொடர்ந்து, இரு பகுதியினரும் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் இரவு 9 மணிக்கு மேலாகவும் தொடர்ந்தது. இதனால், அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (55)

## உடுவில் கமநல நிலையத்தில்
# விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டது

விவசாயிகளின் நன்மைகருதி - உடுவில் கமநல கேந்திர நிலையத்தினரால் விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்று அணமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

உடுவில் கமநல கேந்திரநிலைய பெரும்பாக உதவியோகத்தர் ஸ்ஜோதிநாதன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் விற்பனை நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

இவ்விற்பனை நிலையத்தினூடாக விவசாயிகள் குறைந்த விலையில் கிருமிநாசினிகள், மண்வெட்டிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள், உரவகைகள் மற்றும் விவசாய உள்ளீடுகள் என்பவற்றைக் கொள்வனவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (44)

# புளியங்கூடல் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை

புளியங்கூடல் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும், இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை முறைப்பாடு செய்தும், இதுவரை எந்தவிட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புளியங்கூடல் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து சுமார் 6 வருடங்களாகியும், இன்னமும் அந்தப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தொழில்நிறுவனங்கள் ஆகியன பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தமது கிராமத்திற்கு அருகிலுள்ள ஏனைய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றபோதும், புளியங்கூடல் பகுதி ஏன் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். இது குறித்து இனியாவது உரிய அதிகாரிகள் கவனமெடுத்து, புளியங்கூடல் பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என எதிர்பார்க்கின்றனர். (44)

## பாடசாலை மாணவர்களுக்குரிய
# சீருடைத்துணிகள் முழுமையாக வழங்கப்படவில்லை
# மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இந்த வருடம் சீருடைத் துணிகள் முழுமையாக வழங்கப்படவில்லை என மக்கள் மத்தியிலிருந்து முறைப்பாடு கிடைத்துளளதையடுத்து, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமூக, பொருளாதார, அபிவிருத்தி தொடர்பான சர்வதேச சட்டத்தின்கீழ், பாடசாலை மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் சீருடைத் துணிகள் இந்த வருடம் முழுமையாக வழங்கப்படவில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் கல்விப்பணிப்பாளரிடம் கேட்டபோது- தற்போது இலவச சீருடைத் துணி விநியோகம் தொடர்பாகத் தமக்கு எந்தவித் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்தார்.

இலவச சீருடைகள் வழங்கும் பணிகள் அரசாங்க அதிபர்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றதெனவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து, சீருடை விநியோகம் தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி- கல்வி அமைச்சுடன் கலந்துரையாட இருப்பதாகவும் தெரியவருகின்றது. (202)

# அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் அங்குரார்ப்பணம்

அளவெட்டி மகாஜனசபையின்கீழ் கலைஞர் வட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற கலைஞர்களுடனான ஒன்றுகூடலின்போதே இந்தக் கலைஞர் வட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மகாஜனசபை கலைஞர் வட்டம் என அழைக்கப்படும் இந்த அமைப்புக்கு - சங்கீத பூசணம் வி.கே.நடராஜா போசகராகச் செயற்படவுள்ளார்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது நிர்வாகசபையின் தலைவராக வை.விஜயபாஸ்கரனும், செயலாளராக இ.சர்வேஸ்வரனும், பொருளாளராக பா.பிரதீபனும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தக் கலைஞர் வட்டத்தினரால் வருடந்தோறும் தைப்பொங்கல் தினத்தையொட்டி கலாசார விழாவும், புதுவருடப் பிறப்பையொட்டி நாடகவிழாவும், தீபாவளி தினத்தை அண்மித்து இசைவிழாவும், நவராத்திரி தினத்தை ஒட்டி கலைவிழாவும் நடாத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்தக் கலைஞர் வட்டமானது அளவெட்டி கிராமத்தைச் சேர்ந்த சகலதுறை கலைஞர்களையும் ஒன்றுசேர்க்கவுள்ளதுடன், நலிவுற்றுள்ள கலைஞர்களின் நலன்களை கவனிக்கவுள்ளதாகவும் கலைஞர் வட்டத்தினர் தெரிவித்தனர். (94)




மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற - சின்னப்பாப்பா பாட்டு நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் கவிஞர் சா.வே.பஞ்சாட்சரம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (101)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : நே.தனுசியா
முகவரி : இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

பத்தாவது அகவையில்



பெயர் : ச.பாலுஷன்
முகவரி : சுவிற்ஸலாந்து.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

## மகாபாரதம் தொடர் சொற்பொழிவு

கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் இலக்கியத்தொடர் விரிவுரை - நாளைமுதல் 8 ஆம் திகதி வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. "மகாபாரதம்" பற்றிய இத்தொடர் சொற்பொழிவை தமிழகத்தைச்சேர்ந்த இரா.ருக்மணி நிகழ்த்தவுள்ளார்.

## போதைப்பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரசாரங்கள்

வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனத்தினரால் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேசசெயலர் பிரிவுகளுக்குட்பட்ட பாடசாலைகள், மருதுவமனைகள், பொது ஸ்தாபனங்கள் என்பவற்றினூடாகப் போதைப்பொருள் பாவனை மற்றும் புகைத்தல் என்பனவற்றுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பரவலாக நடைபெறும் இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கில் - போதைப்பொருள் பாவனை, புகைத்தல் என்பவற்றால் ஏற்படும் உடல், உளரீதியான பாதிப்புக்கள் மற்றும் பொருளாதாரரீதியாக ஏற்படும் இழப்புக்கள் என்பன குறித்து மக்களுக்குக் கருத்துரைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பிரசார நடவடிக்கையில் வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் ஆகியோருடன், ஏனைய உறுப்பினர்களும் சேர்ந்து விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். (44)

## மேதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி புதிய ஜனநாயகக் கட்சியின் புரட்சிகர மேதினக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சி.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில்- சட்டத்தரணி தேவராஜா, க.தணிகாசலம், கா.கதிர்காமநாதன், மு.தியாகராசா, ஈஸ்வரி தர்மலிங்கம், ஆனந்த குமாரசுவாமி, பொ.முருகேசு, கா.பஞ்சலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

## புளியங்கூடல் சனசமூக நிலையப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் மகமாரி சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் - இன்று மாலை 5 மணிக்கு நிலையத்தலைவர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 2004 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும், எதிர்காலத் திட்டங்கள் தயாரித்தல் ஆகியனவும் இடம்பெறவுள்ளதால், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

## நாடகப்போட்டி

வட- கிழக்குமாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் யாழ்.மாவட்ட நாடக மன்றங்களுக்கிடையேயான நாடகப் போட்டி எதிர்வரும் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குபற்றும் நாடகமன்றங்கள் மற்றும் பாடசாலைகளுக்குரிய அறிவுறுத்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதெனவும், உரிய திகதிகளில் பங்குபற்றமுடியாத நிறுவனங்களை உடனே தொடர்புகொள்ளுமாறு யாழ். மாவட்ட இணைப்பாளரும் யாழ்பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான மைதிலி விசாகரூபன் அறிவித்துள்ளார்.

## திருமறைக்கலாமன்ற புதிய பணியகம் திறப்புவிழா

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட புதிய பணியகம் - நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு, ஓய்வு பெற்ற யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜே.பி.செல்வராஜா அடிகளாரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்புவிடுத்துள்ளது. (44)

## பிரிவுபசார விழா

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் - எதிர்வரும் 9 ஆம் திகதிமுதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லவுள்ளார். இவரது சேவையைக் கௌரவிக்கும் முகமாக எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு செயலக அலுவலர்களால், செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரிவுபசாரவிழா நடாத்தப்படவுள்ளது. (74)

## கலைஞர்களுக்கு இலவச ஆயுள் காப்புறுதி திட்டம்

கலைஞர்களுக்கு அரச இலவச ஆயுள் காப்புறுதி வழங்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்திலே வயது வேறுபாடின்றி கலைஞர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்தத் திட்டம் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிவுறுத்தல்கள் அவ்வப்பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை பெறவிரும்பும் கலைஞர்கள் - தமது பிரதேச கலாசார உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மக்களின் பாரம்பரிய கலைகளையும் கலைஞர்களையும் பேணுவதில் காட்டும் அக்கறையை, அரசு தமிழ் மக்களின் கலைகள் மீதும் கலைஞர்கள் மீதும் செலுத்துவதில்லை என ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (91)



# சிநேகிதியே

# விளையாட்டுத்துறையில் மிகுந்த ஆர்வமே எனது வெற்றிக்கான காரணம்

**யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் 'கூடைப்பந்தாட்டக் குயின்' என்ற பட்டத்தைப் பெற்ற ஜெராலின் ரெமின்ரா ஜோன்விக்ரருடனான நேர்காணல்....**

2004 ஆம் ஆண்டு மின்னொளியில் காவேரி ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட போட்டியின் பெறுபேறுகளை அறிவதற்காக நாம் சென்றிருந்தோம். அங்கு இறுதியாட்டத்தில் யாழ். அணியும் பங்குபற்றி சுழல் கேடயத்தைத் தன் வசப்படுத்தியது.

இதில் சிறந்த ஆட்ட நாயகியாகவும், தொடர் ஆட்டநாயகியுமாகிய ஜெராலின் ரெமின்ரா ஜோன்விக்ரர் பரிசினை பெற்றுக்கொண்டார்.

'அவரின் விளையாட்டினைப் பார்த்த பொழுது பார்வையாளர்கள் அனைவரும் ஆசனங்களை விட்டு எழுந்து கைதட்டும் அளவுக்கு விளையாடினார். அப்போது தான் எமக்கும் அவரிடம் கருததுக்களைப் பரிமாறுவதற்கு ஆவல் ஏற்பட்டது.

அவர் இந்த மாதம் 30 ஆம் திகதி கொழும்பில் பயிற்சி பெறுவதற்கான ஆயத்தம் செய்யும் பொழுது நாம் அவரிடம் சென்றோம். எம்மை இனிய முகத்துடன் வரவேற்று எம்முடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

பெண்களின் சாதனைகள் எவ்வளவோ இருக்கின்றது என மிகவும் அடக்கத்துடன் நாம் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தொடங்கினார்.

எனக்குத் தற்போது வயது 33 ஆகின்றது. எனது பிறப்பிடம் குருநகர். இப்போது அங்குதான் வசித்து வருகின்றேன். எனது குடும்பத்தில் 5 பேர். 1992 ஆம் ஆண்டு தந்தை இறந்து விட்டார். இதன் பின் நாம் மிகுந்த கஷ்டப்பட்டோம். நான் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கல்விகற்று வந்தேன். பாடசாலைகளில் நடைபெறும் அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்களையும் பெற்றேன். வீட்டின் வறுமை காரணமாகக் க.பொ.த சாதாரணதரத்துடன் எனது படிப்பினை முடித்துக்கொண்டேன். ஆனாலும், எனக்கு விளையாட்டிலிருந்த ஆர்வம் குறையவேயில்லை. சிலருக்கு விளையாட்டானது ஒரு பொழுதுபோக்காக இருக்கும். ஆனால், எனக்கு விளையாட்டானது நான் சுவாசிக்கும் மூச்சுப் போல் ஆகிவிட்டது.

படிப்பை முடித்துவிட்டு வீட்டிலிருந்த நான், 1989 ஆம் ஆண்டிலிருந்து யுத்கர்மல் விளையாட்டுக கழகத்தில் இணைந்து எனது இலட்சியத்தைப் பூர்த்திசெய்ய விரும்பினேன்.

நாட்டின் போர்ச் சூழல் காரணமாக எம்மால் விளையாட்டுத்துறையில் வளர்ச்சியடையமுடியவில்லை. இதனால், யாழ்ப்பாணத்திற்குள்ளேயே எனது திறமைகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. நாட்டில் சமாதானச் சூழல் காணப்பட்டு ஏ - 9 பாதையும் திறக்கப்பட்டதால், 2002 ஆம் ஆண்டு கூடைப்பந்தாட்ட தேசிய அணியில் தெரிவுசெய்யப்பட்டு, இப்போது விளையாடி வருகின்றேன்.

தந்தை இறந்த பின்னர், எனது விளையாட்டிற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடும் எனப் பயந்தேன். ஆனால், எனது தாயார் எதுவித தடையுமின்றி மேலும் உற்சாகப்படுத்தி விளையாட்டில் ஈடுபட வைத்தார்.

என்னை ஒரு வீராங்கனையாக பத்திரிகைகளில் என் கருத்துக்களைப் பிரசுரிக்கும் அளவுக்கும் உயர்த்திவிட்டது என நினைக்கும்போது மனம் சந்தோஷமடைகின்றது. யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டத் தலைவியும் - முன்னாள் விளையாட்டு அதிகாரி ஜே.எப். ஜே. ரூபசிங்கம் இவர் எனது பள்ளிப் பராயத்திலிருந்தே எனக்குப் பயிற்றுநராகக் கடமையாற்றினார். இவர் தனது குடும்ப வேலைகளை விட்டுக்கூட எனது போட்டிக்காக ஒவ்வொரு மாகாணத்திற்கும் என்னுடன்கூட வந்து பயிற்றுவித்துக் கொண்டு இருப்பார். 2002 ஆம் ஆண்டில் என்னை இலங்கை கூடைப்பந்தாட்ட தேசிய அணியில் தெரிவு செய்துள்ளோன் என்ற செய்தியைக் கேட்டவுடன், என்னைவிட பலமடங்கு மகிழ்ச்சியடைந்தவரும் இவரே. அவருக்கு நன்றிகள் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



எனக்கு வலைப்பந்தாட்டம் மட்டுமல்ல, மெய்வல்லுநர் விளையாட்டு, கூடைப்பந்தாட்டம் போன்றவற்றிலும் ஆர்வம் இருந்தது. மெய்வல்லுநர் விளையாட்டில் - முப்பாய்ச்சல், நீளம்பாய்தல் போன்றவற்றில் மாகாணமட்டத்தில் இடங்களைப் பெற்றுள்ளேன்.

எனது வாழ்வில் மறக்கமுடியாத ஆண்டாக 2002 ஆம் ஆண்டு இருந்தது. ஏனென்றால், கூடைப்பந்தாட்ட தேசிய அணியில் என்னைச் சேர்த்துக் கொண்டமை, அடுத்தது, யாழ்.மாவட்டமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் 'கூடைப்பந்தாட்ட குயின்' என்ற பட்டம் வழங்கப்பட்டமையாகும்.

1992 - 1993 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு மாகாணசபை கல்வி கலாசார விளையாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் எமது அணியிலுள்ளவர்களின் கடும் உழைப்பினால் 1995 ஆம் ஆண்டு சாம்பியன் கிடைத்தது.

2000 ஆம் ஆண்டில் சமூர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட போட்டியிலும், 2001 ஆம் ஆண்டு சுற்றுலா விளையாட்டுத்துறை அமைச்சு, விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும், 2002, 2003 ஆம் ஆண்டு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் நடாத்திய சுற்றுப்போட்டியிலும், வடக்குக் கிழக்கு மாகாண மட்டத்திலும் சாம்பியன் கிடைக்கப்பெற்றது.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம், கூடைப்பந்தாட்டச் சங்கங்களிலும் அங்கத்துவம் வகித்து வருகின்றேன். அவர்களின் வளர்ச்சிக்காக என்னால் இயன்றவரை உதவி புரிகின்றேன்.

மேலும் என்னைப்போல் வறுமையிலுள்ள எத்தனையே பேருக்கு விளையாட்டுக்களில் ஆர்வம் இருக்கலாம், சில பிரதேசங்களில் பயிற்றுநர்கள் இல்லாமல் அவர்களின் திறமைகள் வெளிக்கொணர முடியாமலும் இருக்கலாம். இதனால், எனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் எல்லாம் ஊர்காவற்துறை, சாவகச்சேரி, பெரியபுலம் மற்றும் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து கஷ்டப்பட்ட பிரதேசங்களுக்கும் வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி ஜே.எப.ஜே.ரூபசிங்கம் அவர்களுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றேன்.

நான் செல்வி என்ற கட்டத்தை தாண்டி திருமதி என்ற நிலைக்குச் செல்லும்போது, எனது அபிலாசைகள் என்று பார்த்துக் கொண்டிராமல் எனது கணவருக்கும் குடும்பத்திற்கும் எது விருப்பமாக இருக்கிறதோ, அதன் படி தான் நடப்பேன்.

திருமணம் முடிந்த பிறகு கணவர் போட்டியில் பங்குபற்றுவதை விரும்பினால் மேலும் எனது வெற்றிப்பாதைகள் தொடரும் என்று கூறிமுடித்தார்.

**நேர்காணல் - க.கனகராஜா**

# மணப்பெண்ணே!



திருமணத்திற்கு தயாராகும் பெண்ணா நீங்கள்! அப்படியானால், நாங்கள் கூறும் யோசனையை கவனமாக கேளுங்கள்.

நீங்கள் சென்ற் (வாசனைத்திரவியம்) வாங்கப் போகிறீர்களா? மற்றவர்கள் முகம் சுழிக்கும் அளவுக்கு அதிகமாக வாசனைதரும் வாசனைத் திரவியங்களை வாங்காதீர்கள். மற்றவர்களுக்கு அது பிடிக்கிறதோ இல்லையோ சில நேரங்களில் உங்களுக்கே தலைவலியை உண்டாக்கிவிடும். இதனால், திருமண நாள் மோசமான நாளாகிவிடும். எனவே, மிக ரம்மியமான நறுமணத்தில் கிடைக்கும் வாசனைத்திரவியத்தைக் கேட்டு வாங்குங்கள். குறிப்பாக உங்கள் கணவனுக்கு பிடித்தமான நறுமணம் என்ன என்பதை அறிந்துகொண்டு வாங்கினீர்கள் என்றால் வாழ்க்கை நல்லபடியாக இருக்கும்.

குறைந்த விலையில் செருப்பு வாங்குவதைவிட தரமான செருப்பை விலைகூடியதாக இருந்தாலும் வாங்கவும். திருமணம் முடிந்ததும் பல வீடுகளுக்கு விருந்துக்குச் செல்லவேண்டிவரும் அந்தநேரத்தில் தரமில்லாத செருப்புக்களை அணிவதால் அவை எந்தநேரமும் விரைவில் அறுந்து போய்விடலாம். ஆகவே, இரண்டுசோடியாவது நல்ல செருப்பை வாங்குவது நல்லது.

எப்போதுமே திருமணகாலப் பகுதியில் அழைப்பிதழ் கொடுப்பது பிரச்சினை வருவதுண்டு. இதனைத் தடுக்க யார் யாருக்கு அழைப்பிதழ் கொடுக்கவேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்வது நல்லது. உங்கள் மனதிற்கு பிடித்த உடல் நிறத்திற்கேற்ற சாறிகளையும், உடைகளையும் வாங்குங்கள்.

புதியவகை என்ற பெயரில் பொருத்தமற்ற, தரக்குறைவானவற்றை வாங்குவதைத் தவிருங்கள். பெற்றோருடன் இருக்கும்போதே உங்களுக்குத் தேவையான அளவு பட்டுச் சேலைகளை எடுத்துவிடுங்கள். திருமணம் முடிந்தகையுடன் கணவனிடம் எதிர்பார்ப்பதை தவிருங்கள்.

புகுந்த வீட்டில், மாமி, மாமா, மச்சான், மச்சாள்மார்களை உடன்பிறப்புக்கள் என்று எண்ணி பழகுங்கள். அவர்களை வித்தியாசமான உறவில் பார்க்காதீர்கள். அவை பிரச்சினைக்கு வழிவகுக்கும்.

# சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே!

நான் நலம் நாடலும் அஃதே உன் எண்ணங்களைத் தாங்கிருவந்த வண்ண மடல் கண்டு மனம் வருந்துகின்றேன். நற்றவ வானிலும் நனி சிறந்த நம் தாய் நாட்டின் தொப்பூழ்க்கொடி உறவான கலாசாரமும் பண்பாடும் காலாவதியானவை என்ற உனது புதுமைக்கருத்துடன் என்னால் ஒத்துப்போகமுடியாது.

காலத்தின் தேவை கருதிக் கலாசாரத்தையும் மாற்றிக்கொள்ள வேணடும் என்ற உனது கருத்து முதலில் மாற்றப்படவேண்டும். காலத்தின் தேவை கருதி கலாசாரத்தில் சில மாற்றங்களைச் செய்யவேண்டும் என்பதே எனது கருத்தாகும். எமது கலாசார பண்பாட்டிலே ஆங்காங்கே சில கீறல்கள் உண்டு என்பது என் நெஞ்சையும் நெருடும் விடயம்தான். அதற்காக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கட்டிக்காக்கப்பட்ட கலாசார பண்பாட்டை நேற்று வந்த உறவுகளால் சீரழிக்க என்னால் முடியாது. கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கருத்திற்கொண்டு நல்லதொரு எதிர்காலத்தைச் சமைக்கவேண்டிய பொறுப்பு எம் கையிலுள்ளது. இதனையே 'புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவலல' என்கின்றது நம் பழந்தமிழ்ப்பனுவல். ஏனைய கலாசாரங்களிலுள்ள, நமக்கு ஏற்ற விடயங்களை உள்வாங்குவதை விடுத்து, அந்நிய இறக்குமதிக் கலாசாரத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கூத்தாடுவது தற்கொலைக்குச் சமமாகும். ஏனைய கலாசாரத்திற் காணப்படும் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து பண்புடையவற்றை ஏற்றுக்கொள்ளுதலே சாலச் சிறந்தது.

ஏதோ பாரதி கண்ட புதுமைப் பெண்களாக நேர்கொண்ட பார்வையுடையவர்களாக இங்கு நீங்கள் வாழ்வதாக எழுதியிருந்தாய். பாரதி சொன்ன நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் உண்மையில் உனக்கிருந்தால், அந்நிய கலாசாரத்தோடு அள்ளுப்பட்டுப் போய் இருக்கமாட்டாய். நேர் கொண்ட பார்வை என்பது எதையும் நன்றாக அலசி ஆராய்ந்து பார்ப்பதே ஆகும். அந்த நேர் கொண்ட பார்வை உன்னிடம் இல்லை என்பதை உனது கருத்துக்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஆண் – பெண் உறவு என்பது எமது சமூகத்தில் அனுமதிக்கப் படாத ஒன்று என்ற உனது கருத்து தப்பானதாகும். ஆண் – பெண் உறவை நீ வாழும் கலாசாரம் நோக்கும் தன்மை வேறு, எமது கலாசாரம் நோக்கும் தன்மை வேறு. ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற உன்னத உறவிலேதான் எமது சமூகம் ஆண் – பெண் உறவை அணுகுகின்றது. ஆண் – பெண் உறவு என்பது குடும்ப வாழ்விலே சங்கமமாக வேண்டும் என்பதே எமது பண்பாடு. பொங்கும் காதலுக்கும் மங்கா வீரத்திற்குமாக எத்தனையோ விலைகளை எமது பண்பாடு கொடுத்துள்ளது. கணவனுடன் கானகம் சென்ற மைதிலி முதல், நில் என்று சொல்லி தன் கற்பால் சூரியனையே கட்டிப்போட்ட நளாயினி வரை எத்தனையோ பெண்கள் எமது கலாசாரத்திலே வளர்ந்துள்ளார்கள்.

உனது திறந்தவெளிச் சமூக உறவிலே காலை மலர்ந்து மாலை வாடிப் போகும் மலர்கான குடும்ப உறவுகள் எத்தனை? காலவோட்டத்தின் கைகளுக்குள் சிக்கி கரைந்துபோன இளைஞர்கள் யுவதிகள் எத்தனை? இத்தனையும் எதனால் நிகழ்ந்தது.

எங்கும் கட்டுப்பாடுடன் கூடிய சுதந்திரமே நல்லதொரு வழிக்கு இட்டுச் செல்லும் என்பதை மறந்து விடாதே. உள்ளத்திலே உதிக்கும் எண்ணங்களை எழுதிவிட இப்பேநேரம் போதாது எனவே உனது பதில் கண்டு தொடர்வேன்.

அன்புள்ள சிநேகிதி
-நீலா.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

வகுப்பிலே பாடம் நடந்து கொண்டிருந்தது. ரீச்சர் கரும்பலகையில் பூக்களின் பெயர்களை எழுதியிருந்தார். அவற்றின் நிறங்களின் பெயரை ஒவ்வொருவரும் கரும்பலகையில் எழுதவேண்டும் முதலில் மல்லிகை



அடுத்து கொன்றை...

அடுத்து.... செந்தாமரை ....

அடுத்து... என்னால் படிக்க முடியவில்லை. வகுப்பறையில் எல்லோரும் கரும்பலகையைப் பார்த்துக் கொண்டிருக்க என் பார்வை மட்டும் வெளியே மேயத் தொடங்கியது. மாமரத்தில் இரண்டு சின்னக் குருவிகள் யாரையோ காத்துக்கொண்டிருந்தன. அதுகளின்ரை சின்னக்கால்கள் மரக்கிளையில் அந்தரத்தில் நிற்பதுபோல இருந்தன. அடிக்கடி கால்களை மாற்றி மாற்றி வைத்தன. திடீரென ஒரு குருவி பறந்து வந்தது. குஞ்சுகள் இரண்டும் ஆரவாரமாகச் சிறகையடித்து வரவேற்புக்கூறின. நாங்கள் ரீச்சருக்கு காலையில் வணக்கம் சொல்லுவது போல தங்கடை மொழியிலை ஏதோசொல்லிச்சினம். அம்மாக் குருவிதான்.... இப்ப எனக்கு குருவியைப் பார்க்க ஆசையாக இருந்தது. பெரிய குருவியின்ர வாயில ஒரு சின்னப் புழு ஓ! குஞ்சுகளுக்கு அம்மா சாப்பாடு குடுக்கப் போறா நான் நினைச்சது சரிதான். அம்மாக் குருவி தன் வாயிலிருந்த புழுவைத் தன் கால்களால் மிதித்தபடி வாயினால் அதைச் சிறிய துண்டாக்கிப் பக்குவமாகச் சின்னக்குருவியின் வாயிலே ஊட்டியது. சின்னக்குருவியும் சிறகையடித்துக் கொண்டு சாப்பிட்டது. இரண்டு குருவிக் குஞ்சுகளுக்கும் தாய்குருவி மாறி மாறி உணவூட்டியது. இந்தக் குருவிக் குஞ்சாக நான் பிறந்திருந்தால்.... என்னுடைய எண்ணம் ரீச்சரின் குரலால் குறைந்தது.

யாசோதா! என்ன பராக்குப் பார்க்கிறாய்... இப்ப உன்ரை முறை! வா எழும்பி வந்து பூவின் நிறத்தை எழுது. எனக்கு கொஞ்சம் எரிச்சலாக இருந்தது. ரீச்சர் நல்லவதான். எண்டாலும் சொன்ன வேலையைச் செய்யா விட்டால் முழங்காலிலை இருக்கச் சொல்லுவா. எல்லோரும் என்னையே பார்க்கிறார்கள்... நான் மெல்ல எழும்பிக் கரும்பலகைக்குக் கிட்டப்போனேன். அதில் எழுதியிருந்த பூவின்ரை பெயரை மெல்லமாக மனதுக்கை எழுத்துக்கூட்டி வாசித்தேன். பொன்னொச்சி... அப்பாடா வாசித்துவிட்டேன் சரி.. அது என்ன நிறம் எங்கடை வகுப்புக்கு வெளியே ஒரு முறை பார்வையைச் சுழலவிட்டேன். ரீச்சரின்ரை குரல் என்னைத் திரும்பவைத்தது. என்ன யசோதா! கெதியா எழுதுங்கோவன்! எனக்கு ரீச்சரிட்டை சொல்ல வெக்காயிருந்தது. தலையைச் சொறியத் தொடங்கினேன். ரீச்சருக்கு என்ரை நிலைமை சட்டென்று விளங்கிவிட்டது. பூவின்ரை பெயரிலை நிறமும் இருக்கு... எனக்கு உதவி செய்தா! உடனை என்ரை மூளையிலை பளிச்சென்று பூவின்ரை நிறம் தெரிந்தது. கரும்பலகையிலை 'பொன்னிறம்' என்று நான் எழுதி முடிக்கவும் மணியடித்தது. எல்லோரும் புத்தக மூட்டையைத் தோளிலை மாட்டிக்கொண்டு வெளியாலை ஓடிச்சினம். நான் அவசரப்படவில்லை. என்ர பார்வையைக் குருவிகளை நோக்கித் திருப்பினேன் ஐயோ... அதுகளைக் காணவில்லை எனக்கு மனதுக்கை ஏதோ செய்தது. ... ரீசசர் எனக்குக் கிட்ட வந்தா என்ன யசோதா குருவிகளைத் தேடுகிறாயா... அதுகள் அம்மாக்குருவியோடை பறந்து போட்டுதுகள்! எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை ரீச்சர் படிப்பிக்கிற நேரத்திலை என்னைப் போலை குருவிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறா.

ரீச்சர் வகுப்பறைவிட்டு வெளியே வந்து மரத்தடியிலை இருந்த மரக்குற்றியிலை இருந்தா. நானும் பின்னாலை வந்து அவவுக்க முன்னாலை நின்றேன். அவவின்ரை முகத்திலை ஒரு வாட்டம் ஏன்... எங்கடை ரீச்சர் எப்பவும் சந்தோஷமாக இருப்பா. நல்ல சுறு சுறுப்பு. தமிழ்ப்பாடம் படிப்பிப்பதில் கெட்டிக்காரி. அவா சீலை கட்டி, ஒற்றைப் பின்னல் போட்டு, புத்தகத்தைக் கையிலை எடுத்துக் கொண்டு நடந்து வந்தால்... எல்லோரும் அவவையே பார்த்துக் கொண்டிருப்பினம் நானும் அப்பிடித்தான் அவவின்ரை குரல் தேன் போலை இருக்கும். ஆனால், அவவின்ரை பெயர்தான் எனக்கு விருப்பமில்லை. நிரோஷினி,! என்ன பெயர் இது தமிழ்ப் பெயர் ஒண்டு வைச்சிருக்கலாம் தானே! யசோதா! என்ன கடும் யோசனை? இதிலை வந்து இரு! எனக்குக் கொஞ்சம் வெக்கமாயிருந்தது. எண்டாலும் ரீச்சருக்குப் பக்கத்திலை இருக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடலாமா? அவவுக்குப் பக்கத்திலை போய் ஒதுக்கமாக இருந்தேன். ரீச்சர் என்ரை கையைப் பற்றிக் கொண்டா. அவவின்ரை மனத்திலை இருந்த சோகம் கையிலை தெரிஞ்சுது. அது குளிராக இருந்தது. யசோதா! உனக்கு குருவியைப் பார்க்கின்றது நல்ல விருப்பமா? ரீச்சரின்ரை கேள்வியை அவவிடமே திருப்பிக் கேட்க வேணும் போலை இருந்தது. நானும் கேட்டுவிட்டேன்.. ரீச்சரின்ரை முகம் இருண்டது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ரீச்சரின் கைப்பிடி இறுக்கியது. எனக்கும் நல்ல விருப்பம்தான் யசோதா! நான் சின்ன வயதிலே என்ரை அம்மாவைத் துளைச்சுப்போட்டன். அவ ஒரு நாளைக்குத் திரும்பி வருவா எண்டு நம்பிக் கொண்டிருக்கிறன்! ரீச்சரின்ரை கண்களின்ரை கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ரீச்சரின்ரை சோகம் எனக்கு நன்றாக விளங்கியது. நானும்..... என்ரை அம்மாவை இடம் பெயர்ந்து போனபோது சாவகச்சேரியிலை துளைச்சுப்போட்டன். அண்டைக்கு இரவிரவாக நடந்தபோது .... இடையிலை யாரோ பாம்பு! பாம்பு எண்டு கத்தச் சனமெல்லாம் நெரிபட்டு ஓட... என் கைப்பிடியும் இளகி அம்மாவின்ரை கையைவிட்டுவிட்டேன் நான் ஓடிய ஓட்டத்தில் சறுக்கி விழ பிறகு அம்மாவைக் காணவில்லை.



விடிய அழுது கொண்டு என்னை... இப்ப என்னை வளர்க்கிற அம்மாதான் அணைச்சுக் கூட்டி வந்தா. அவவின்ரை அன்பிலை நான் எட்டுவருடமாக வளர்ந்துவிட்டேன். என்ரை வளர்ப்பு அம்மாவுக்குப் பிள்ளைகள் இல்லையாம். என்னைக் கடவுள் தந்த பிள்ளை எண்டு சொல்லி அன்போடு வளர்க்கிறா. என்றாலும் என்ரை அடி மனத்தில் என்னுடைய பெற்ற தாயைப் பார்க்கவேணும் எண்ட ஆவலை மறைச்சு வைச்சிருக்கிறன். தேர், திருவிழா எண்டு போனால் என்ரை அம்மாவின்ரை முகத்தைத்தேடுவன். வளர்ப்பு அம்மாவுக்கு என்ரை ஆவல் தெரியாது. ஆனால், இண்டைக்கு ரீச்சர்... என்ரை நடவடிக்கைகளைப் பார்த்ததுபோல என்ரை வளர்ப்பு அம்மாவும் என்னைக் கவனிச்சுக் கொண்டு இருக்கிறாவோ?

ரீச்சர் கண்களைத் துடைச்சுக் கொண்டு சொன்னா 'யசோதா' உனக்கு ஒரு நல்ல அம்மா கிடைச்சிருக்கிறா. எனக்கும் அப்பிடி ஒரு அம்மா கிடைப்பா எண்டு நம்பியிருக்கிறன். 'ரீச்சர்! எங்கடை அம்மாமார் இந்த தாய்க்குருவியைப் போல ஒரு நாளைக்கு பறந்து எங்களிட்டைக் கட்டாயம் வருவினம் என்ரை வாய் சொல்லியது. மேலே மரக் கொப்பில் குருவிகளின் ஆரவாரம் கேட்டது. ஓ! இப்போது நாலுபோர் அப்பாக்குருவியும் சேர்ந்து வந்திருக்கு. நானும் ரீச்சரும் பார்த்துக் கொண்டிருந்தோம். குருவிகள் தங்கடை மொழியில் பேசிக்ககொண்டிருந்தன. ரிச்சர் சொன்னா... யசோதா! இதுகளுக்கும் தமிழ் சொல்லிக் குடுப்பமா? நான் தலையை ஆட்டினேன் ரீச்சர் மெல்லப்பாடினா. குரல் தேனாக காதிலை விழுந்தது.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா.... உன்றன், கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா... அது கேட்டு குருவிகள் பேச்சை நிறுத்திவிட்டு எங்களைப் பார்க்கத் தொடங்கின.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுக்கும் பாடம் சிக்கனம்

"சிக்கனம் வீட்டைக்காக்கும். சேமிப்பு நாட்டைக் காக்கும்". இந்த ஸ்லோகத்தை, நம் பெரியோர்கள் அடிக்கடி கூறுவதை கேட்டிருப்பீர்கள். சிக்கனம், நிச்சயமாக வீட்டைக் காக்கும். சிக்கனத்தை நாம் காக்க வேண்டாமா? அதுவும் ஐந்தில் வளையும் குழந்தைப் பருவத்திலிருந்தே வீட்டில் குழந்தைகளுக்கு சிக்கனத்தை நாம் பழக்கிக்கொடுப்பபோமேயானால் அது பாரம்பரியமாகி - வீட்டையும் பிறகு



நாட்டையும் கட்டாயம் காக்கும்.

சில, வீடுகளில் "சின்னக் குழந்தை அதுக்கென்ன தெரியும்" என்று நிறைய செல்லம் கொடுப்பதைப் பார்க்கிறோம் உண்மைதான். சின்னக்குழந்தைக்கு எப்படித் தெரியும் ஒவ்வொரு பொருளினதும் விலை. அவர்களுக்கு எந்தவொரு விலை கூடிய பொருளும் விளையாட்டுப் பொருளாகத்தான் தோன்றும். அவர்களுக்கு அதன் பக்குவத்தைப் பெரியவர்களாகிய நாம் தான் எடுத்துக் கூற வேண்டும்.

குழந்தைக்குத் தெரியுமா பற்பசையின் விலை. ஐந்தாறு வயதுக் குழந்தைக்கு தெரியாமல் பிரஷ்சின் முழு நீளத்திற்கும் பற்பசையை பிதுக்கும்போது நாம்தான் அதற்கு எடுத்துக்கூற வேண்டும். "இந்த குட்டி பற்களைத் தேய்ப்பதற்கு சிறிதளவு பற்பசை போதும்" என்று மென்மையாக தேவைப் படுமளவை அவர்களின் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

சில குழந்தைகள் தண்ணீர் குழாயை திருப்பி, அதிலிருந்து தண்ணீர் வருவதை அதிசயமாகப் பார்த்து ரசிப்பார்கள். நீரின் அருமை நமக்குத் தெரியாதா என்ன? "நீரழிந்த வீடு சீரழிந்த போகும்." என்று ஒரு பழமொழிகூட உண்டு அல்லவா? கூடியவரை விபரம் அறியாத குழந்தைகளை - அவர்களாகத் தண்ணீர் குழாயைத் திருகுவதைத் தவிர்க்க வேண்டும். சிறிது வளர்ந்து விட்ட குழந்தைகளாயின், அவர்களுக்கு விளக்கும் வகையில் நீரின் அருமை, பெருமைகளை எடுத்துக் கூற வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்கும் வீட்டில், குளியலறையில் அவர்கள் போடும் ஆட்டத்தை அடக்கவே முடியாமல் இருக்கும். இதனால் - இரண்டு, மூன்று பேர் குளிக்கும் நீரினளவு விரயமாவதுடன், சவர்க்காரமும் பந்து போல அங்கும் இங்கும் உருண்டோடி கடைசியில் சவர்க்காரப் பெட்டியினுள் அரைவாசி நீருக்குள் கரைந்தும், கரையாமலும் மூழ்கிக் கிடக்கும்.

சில வீடுகளில் பால், தேநீர் அடிக்கடி குடிக்கும் பழக்கமுள்ள பிள்ளைகள் சிறிதளவேனும் கோப்பையினுள் மிகுதி வைப்பார்கள். இதனை பெற்றோரும் கண்டுகொள்வதில்லை. இன்று நம் நாட்டில் பால்மா எதுதான் குறைந்த விலையில் விற்கின்றது. விலை கொடுத்துப் பொருட்களை வாங்கும் போதுதான் வயிறு எரியும். ஆனால், பிள்ளைகள் கீழே, மேலே கொட்டி அல்லது மிச்சம் விட்டும் வீணாக்கும்போது, அதனை யாரும் தட்டிக் கேட்பதுமில்லை. அவர்களை அடக்குவதுமில்லை. இத்தகைய பழக்கமுடைய பிள்ளைகளுக்கு, அதன் விலையின் பயனை எடுத்துக்கூறி அவர்களை மாற்றுவதற்கு முயற்சிக்கவேண்டும்.

அநேகமான தாய்மார், எனது மகன் கத்தரிக்காய்க்கறி தொடவே மாட்டான்" எனது மகள் பாகற்காய்க்கறியை தொடவே மாட்டாள்" என்று பெருமைப்பட்டுக் கூறுவதை நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். சிறுவர்கள் மட்டுமா, ஏன் வளர்ந்தவர்கள் கூட உணவில் இந்த தள்ளுபடி உண்டு தானே. இப்படியான சந்தர்ப்பங்களில், அவர்கள் அதனை உண்ணமாட்டேன் என்று விடாப்பிடியாக இருந்தால், அதனை முடிந்தவரை சாப்பாட்டுக் கோப்பையில் போடவிடாது தடுக்கலாம். கடைசியில் குப்பைக் கூடையில் போடுவதை விட, இதனை தவிர்ப்பது நல்லதுதானே.



சிக்கனத்துடன் போஷாக்குப் பற்றியும் சிறுவயதிலிருந்தே அவர்களுக்கு முடிந்தளவு எடுத்துக்கூறவேண்டும். சில குழந்தைகள் பென்சிலை கூராக்குகிறேன் கூராக்குகிறேறென்று சீவித் தள்ளுவதையே தங்கள் தொழிலாக கொண்டிருப்பார்கள். வகுப்பில் ஆசிரியர் பாடம் எழுதக் கொடுத்தால், இவர்கள் பென்சில் சீவி முடிப்பதற்கிடையில் பாடத்திற்கான நேரம் முடிந்துவிடும். இவ்வாறு சென்றால் ஒரு நாளைக்கு ஒரு பென்சில் என தொடர்கதையாகிவிடும். எழுதி அல்லது வரைந்து பென்சிலின் கூர்முற்றாக கரைந்ததன் பிறகுதான் அதுவும் சிறிய நீளத்திற்கு தான் சீவ வேண்டுமென்பதைப் பல முறையாயினும் கூறி அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். வீட்டினுள்ள பெரியவர்கள் முன்மாதிரிகளாக நடப்பதன்மூலம், தாங்கள் அணியும் ஆடைகளில் கறைகளை படிவதை தவிர்த்தல், தேவை முடிந்ததும், மின் விளக்குகள், மின்விசிறி போன்வற்றை அணைத்தல் போன்ற பழக்கங்களைக் குழந்தைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும். சிக்கனத்தைச் சிறுவயதிலிருந்தே பழகினால்தான் பெரியவர்களானதும் நாட்டில் நல்ல பிரஜைகளாக திகழமுடியும்.

# இந்த வார பலன்கள்

## 30.04.2004 - 06.04.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| புத | சூ ராகு | சுக் | செவ் சனி |
| யுரே | 01 பகல் 01-23 கன்-சந<br>03 மாலை 4-36 துல-சந<br>05 மாலை 5-23 விருச்-சந்<br>06 பி.இ 2-19 மிது-சுக் | | |
| நெப் | | | சந் குரு |
| | | கே | |

### மேடம

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். குடும்பத்தில் நிம்மதி குறையும். எந்த ஒரு கருமத்திற்கும் பல தடவை முயலவேண்டியேற்படும். மனைவி மக்களால் வீண் செலவுகள் ஏற்படலாகும். பெரியார்களின் உதவிகள் குறையும். ஏமாற்றுப் பேர்வழிகளைப்பற்றி அவதானமாக இருத்தல் நன்று. உடல்நலமும் இடையிடையே பாதிக்கப்படலாம். குடும்பப் பெண்களுகது சோதனைக்காலமாக அமையும். விவாகப பேச்சுக்கள் காலதாமதத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தினருக்கு வேலைப்பளு கூடுதலாகவே காட்டும். உயரதிகாரிகள் ஆதரவு கிடையாது. வர்த்தகாகளுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். பண உதவிகள் கிடையாது. மாணவர்களுக்கு பரீட்சைகள் முன்னேற்றம் தராது.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு இவ்வாரம் தொழில் சிறப்படையும். பொருளாதாரநிலை உயரும் குடும்பத்தில் ஒற்றுமையும் சிறப்பும் ஏற்படும். பிள்ளைகளால் உதவி கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வரும். எடுத்த காரியங்கள் தங்குதடையின்றி அனுகூலமாகும். உல்லாசப் பிரயாணங்களும் அமைய இடமுண்டு. குடும்பப் பெண்கள மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் விரைவில் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்கள் மன உற்சாகத்துடன் தமது பணிகளையாற்றமுடியும். அதிகாரிகளின் உதவி கிடைக்கும். வர்த்தகர்களுக்கு - வியாபாரம் சிறப்பாக நடக்கும். எதிர்பார்த்த உதவி கிடைகும். மாணவர்களுக்கு ஆசிரியரின் ஒத்துழைப்பும் முன்னேற்றமும் உண்டு.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். தொழிற்துறை ஓரளவு நன்று. உறவினர், நண்பர்களுடன் ஒற்றுமை ஏற்படும். பொருளாதார நிலை சமமாக இருக்கும். தேகசுகம் அதிகம் பாதிக்காது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். பழைய கடன்கள் இருந்தால் அவை தீரக்கூடிய வாய்ப்புண்டு. விவாக முயற்சிகள் காலந்தள்ளிப்போகும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருப்பினும் முன்னேற்றமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். பணம் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு. உயர்கல்வி கிடைக்கும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



இவர்களுக்கு தொழில் முயற்சி நன்றாக இருப்பினும் குடும்பத்தில் கருத்துவேற்றுமை உண்டு. விரோதங்களால் வாய்த்தர்க்கம் ஏற்படலாம். அமைதியைப் பேணுதல் நன்று. பிள்ளைகளால் உதவி குறையும். ஆடம்பரச் செலவுகளால் பணக்கஷ்டம் தலைதூக்கும். குடும்பப் பெண்களுக்கு தொல்லைகள் அதிகரிக்கும். உத்தியோகத்தினருக்கு பிரயாசை கூடுதலாகவே இருக்கும். எனினும் உயரதிகாரிகளின் உதவி உண்டு. திருமணப் பேச்சுக்கள் சற்று தாமதமாகி நிறைவேறும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வருவாயும், முன்னேற்றமும் உண்டு. மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகள் கிடைக்கலாம். வெளிநாட்டுப் பயணமும் கிட்டும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு வியாழசுகம் குன்றியிருப்பதால் குடும்பத்தில் மனவேற்றுமை அதிகரிக்கும். எனினும் அவை உடனுக்குடன் சாந்தமடையும். புத்திரர் வழியால் உதவி உண்டு. உறவினர்களுடன் விரோதச் சம்பவங்கள் ஏற்படலாம். தேகநலத்தைப் பேணிக்கொள்வது நன்று. திருமணப் பேச்சுக்களில் புதிய சிக்கல்கள் தோன்றும். பெண்கள் குடும்ப விஷயத்தில் குறைகேட்க இடமுண்டு. உத்தியோகத்தினருக்கு வசதிகுறைந்த இடமாற்றங்கள் ஏற்படலாம். நேர்மை நிதானம் நன்மை தரும். வர்த்தகர்களுக்கு கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போகலாம். வாடிக்கையாளர்கள் விலகிப்போவார்கள். மாணவர்களுக்கு சுயமுயற்சியும் குரு தெய்வ பக்தியும் முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலையில் கஷ்டங்கள் ஏற்படும். அவற்றைச் சமாளிக்க வேண்டியிருக்கும். எல்லாக் கருமங்களிலும் ஏமாற்றுபவர்களைச் சமாளிக்கவேண்டும். வருமானம் கூடுதலாக இருப்பினும் அதற்கேற்றபடி செலவுகளும் அதிகமாகும். பிள்ளைகளால் கவலைகள் அதிகமாகும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். தேகசுகம் இடையிடையே தொல்லைகளைக் கொடுக்கும். திருமணப் பேச்சுக்கள் இழுபறியையே காட்டும். தொழில் புரிவோருக்கு வேலைப்பளு அதிகமாயினும் அதிகாரிகள் உதவி கிடைக்கும். சிலருக்கு இடமாற்றங்கள் வரலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு. சிலருக்குத் தொழில்வாய்ப்பு கிடைக்கலாம்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். தொழில்கள் நன்றாக அமையும். பொருளாதாரநிலை நன்றாக இருக்கும். உறவினர்களின் வருகை அதிகரித்துக் காணப்படும். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி கிட்டும். அயலவர்கள் நண்பர்கள் உதவி செய்வார்கள். தேகசுகம் பாதிப்படையாது. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிகாரிகளின் உதவி உண்டு. சிலருக்கு நல்ல இடமாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்பத்தில் சிறு சிறு துன்பங்கள் ஏற்படலாம். மனதில் நிம்மதிக்குறைவும், கவலையும் இருந்துகொண்டிருக்கும். எந்தத் தொழிலும் செய்வதற்கு நாட்டமிராது. புத்திரர்களால் உதவி அதிகம் இராது. நெருங்கிய உறவினர்களிடம் கருத்துவேற்றுமை உண்டாகும். தேகசுகக்குறைவும் இடையிடையே காட்டும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் காட்டும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைப் பழகவேண்டும். விவாக விஷயங்களில் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு நிம்மதி குன்றும். வேலைகளைச் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். விற்பனையாவது கடினம். மாணவர்களுக்கு கல்வியில் தடை தாமதம் ஏற்படும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எனினும் சிறுசிறு சச்சரவுகள் இடையிடையே தோன்றும். புத்திரர்களால் செலவு அதிகம் காட்டும். இனபந்துகளுடன் கருத்துவேற்றுமை உருவாகலாம் வேலை வாய்ப்பும், பொருளாதாரமும் ஓரளவு நன்றாகவே அமையும். ஆடம்பர வாழ்க்கையை விரும்புவதால் பொருட்செலவு அதிகமாகக்காட்டும். விவாகம் சம்பந்தமாக பேச்சுக்கள் தடையைக் காட்டினாலும் குருவின் அனுகூலத்தால் நன்மை தரும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் முன்னேற்றம் செல்வாக்கு அதிகமாகும். அதிகாரிகளின் உதவி உண்டு. வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக இருக்கும். பணம் சேரும். மாணவர்களுக்கு முன்னேற்றமும் செல்வாக்கும் உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு இல்வாழ்க்கை சிறப்பாக அமையும். மனைவி பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. பொருளாதார நிலையில் பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கும். தேகநலன் பாதிப்படையாது. குடும்பத்தில் சுபகருமங்கள் நடக்கும். வெளிநாட்டிலிருந்து பண உதவி கிடைக்கும். குடும்பப் பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவர். விவாகப் பேச்சுக்கள் தாமதம் காட்டும். அடிக்கடி பிரயாணங்கள் செய்ய வேண்டியிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் ஆர்வமும் உயர்ச்சியும் உண்டு. சிலருக்கு இடமாற்றம் கிட்டும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராகவே இருக்கும். பணவருவாய் உண்டு. மாணவர்கள் முன்னேற்றம் காண்பர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசிக்காரருக்கு செய்தொழில் நன்மையளிக்கும். பொருளாதாரநிலை திருப்தியளிக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வு ஒற்றுமை தென்படும். அயலவர்கள் உறவினர்களிடையே பரஸ்பர ஒற்றுமை வலுக்கும். விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைக் கொடுக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தினர் உற்சாகத்துடன் பணியாற்றுவர். சிலருக்கு சம்பள உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளைச் செய்ய நன்று. வாடிக்கையாளர்கள் அதிகமாகச சேருவர். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமும, முன்னேற்றமும் உண்டு. உயர்கல்வி கற்கக்கூடிய வாய்ப்புக்கள் கிட்டும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு செய்தொழிலில் பிரயாசை அதிகமாகும். குடும்ப அங்கததவர்களிடையே கருத்துவேற்றுமை தோன்றும். குடும்ப சுகமும் சற்றுப் பாதிப்பாகவே இருக்கும். வைத்தியச்செலவுகள் தலைதூக்கும். பொருளாதாரநிலை திருப்தியாக இராது. இதனால் கடன் தொல்லைகளும் தலைதூக்கும். குடும்பப் பெண்கள் நிதானம், சிக்கனம் என்பவற்றைக் கடைப்பிடித்தல் நன்று. விவாகம் சம்பந்தமாக நடவடிக்கைகள் பிற்போடப்படும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் நடந்துகொள்வது நன்று, வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிரமங்களைத் தோற்றுவிக்கும். வாடிக்கையாளர்கள் விலகிச்செல்லக் கூடும். அலைச்சல்களும் அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறையின்மை காட்டும். உயர்கல்வியில் தடங்கல்கள் ஏற்படலாம்.

✦

மூலிகை அறிவியல்

# மூலிகைகளும் அவற்றின் நோயெதிர்ப்பு சக்தியும்

ஜெயா

### வல்லாரை

கடுப்பு, மலக்கழிச்சல், கண்டரோகம் நீங்கும் . நிழலில் உலர்த்தி இடித்து, சூரணம் செய்து, சக்கரைக்கட்டி மூன்றுவேளை கொடுக்க - குட்டம், கண்டமாலை, பல்லீறுகளிலுண்டான ரணம் சூதகசன்னி மேகவாயுப் பிடிப்பு, வீக்கம், ஞாபகசக்தி குறைவு இவைகள் குணமாகும்..

இதனைப் பச்சையாக சம்பல்போட்டு உண்ண நன்றாக இருக்கும். எமது வீட்டுத் தோட்டங்களிலும் நீர்தேங்கி நிற்கக்கூடிய இடங்களிலும் நன்றாகப் பயிர்செய்யமுடியும். எதற்கும் ஒரு வரையறையுடன் உண்ணுதலே சிறந்ததாகும். அதிகமாக உண்ணுதல் மூளை வரட்சியை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகின்றது.

### முருங்கை

இதில் விற்றமின் ஏ (A), சீ (C) கல்சியம் நிரம்ப உண்டு. முருங்கைக்கீரையில் ஒரு பேணி முருங்கைச்சாறு - எட்டுப்பேணி பசும்பாலுக்கும், ஆறு தோடம்பழத்திற்கும் எட்டு வாழைப்பழத்திற்கும், இரண்டரைக்கிலோ மாம்பழத்திற்கும், சமமாகக் கருதப்படுகிறது.

சுண்ணாம்பு தேன்கூட்டி தொண்டைக் குழியில் தடவ இருமல், குரல்கம்மல் தீரும். இலைச்சாற்றுடன் மிளகு சேர்த்து அரைத்து தலைவலி, தொண்டைவலி இவற்றுக்குப் பற்றுப்போட குணமாகும்.

இதன் பட்டையை அவித்து எடுத்த நீரில் இரசம் போன்று புளி, மிளகாய், உப்புச்சேர்த்து சாப்பிட குளிர்சுரம், காக்கைவலி, பாரிசவாயு, சூதகசன்னி இவை நீங்கும். எதற்கும் தகுந்த வைத்திய ஆலோசனையுடன் மேற்கொள்ளுதலே பின்விளைவுகளைத் தடுக்கும்.

### முடக்கற்றான்

இதனை இடித்து 1/8 பாகமாக சுண்டக் காய்ச்சி ஒரு அவுன்ஸ் வீதம், இரண்டு வேளை மூன்றுநாள் கொடுக்க, நரம்பு சம்பந்தமான மேகவாயுப்பிடிப்பு, மூலம், கபம் சம்பந்தமான இருமல், மலச்சிக்கல் இவைகள் போய்விடும். இதன் இலைகளை உள்ளி ரசத்தில் இட்டோ அல்லது பச்சைமிளகாய் பச்சடியில் சேர்த்தோ இனிமையாக உண்ணலாம். இதனைத் தொடர்ந்து பாவிப்பதாயின் தகுந்த ஆயுர்வேத மற்றும் சித்தவைத்திய ஆலோசனை பெறுதல் சிறந்ததாகும்.

### வாகை

வாதச்சொறி, தாகசுரம், பித்தவிரணம் நீங்கும். பட்டைச்சூரணத்தை திரிகடிப்பிரமாணம் இரண்டுவேளை கொடுத்துவர இரத்த மூலம், உஷ்ணபேதி குணமாகும் எனப்படுகிறது.

நீங்கள் வாகை பற்றிய ஏனைய விபரங்களையும், பலன்களையும், அதன் பக்க விளைவுகளையும் அறிந்திருத்தல் நன்றாகும். இதற்காக நீங்கள் சிறந்த இயற்கை வைத்திய நிபுணரை நாடுங்கள்.

### முசுமுசுக்கை

இந்த இலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றில் ஒரு இரும்புக் கம்பியை பளுக்கக்காச்சி தோய்க்க சாறு முறிந்து விடும். இதை 4 இல் 1 பாகம் வீதம் கொடுக்க கபம் கரையும்.

இருமல் அடங்கும், ஜலதோசம் சுரம்குணமாகும். வேர்ச்சூரணத்தை பாலில் காய்ச்சி கொடுக்க தொன்டைக்கரகரப்பு குணமாகும். உடல் உரமாகும். கண்பார்வை மங்கல், ஆஸ்ததுமா இவைகள் நீங்கும்.

இதன் இலையினை சம்பல் போட்டு உண்ணச்சிறந்ததாகும். இது சாதாரணமாக முற்பற்றைகளில் படர்ந்து காணப்படும். இது அதிக உஷ்ணம், கொண்டதால் பாவனை கட்டுப்பாட்டோடு இருத்தல் நன்று.

### முசுட்டை

வாதவலி, மயக்கம், நமைச்சல், உட்சூடு, இவைகளைப் போக்கும். வெண்மை நிறப்பூ பூக்கும் பூண்டை முசுட்டை என்றும், மஞ்சல் நிறப்பூ பூக்கும் பூண்டை பொன்முசுட்டை என்றும் கூறுவர்.

வேர் சூரணத்தை தேனில் கொடுக்க சுரம், பேதி, நீர்சம்பந்தமான ரோகங்கள் சீரணமின்மை குண்டிக்காய் வீக்கம் இவைகுணமாகும்.

இதன் இலையினை வறுத்தும், காயினை கறிசமைத்தும் உண்ண நல்ல உணவாக அமையும். இதன் ருசி ஒரு தனிரகமாகும். நீங்களும் உண்டுபாருங்களேன். இலவச உணவு தானே.

### பிரண்டை

இதனை நெய்விட்டு வறுத்து, அரைத்து பாக்குப் பிரமாணம் ஏழுநாள் இரண்டுவேளை சாப்பிட ரத்தமூலம், கபதோசம், முளைமூலம், ரத்தப்பேதி நீங்கும். எலும்புமுறிவைக் கூட்டுவிக்கும்

இதன்துளிர்களை கறியாகச் சமைத்து உண்ண - நன்றாகவும், சுவையாகவும் இருக்கும். ஆனால் இதன் பாவனை அளவு மிக அவதானத்துடன் கையாளவேண்டும். இதற்கு தகுந்த மூலிகை வைத்தியரின் ஆலோசனை பெறுதல் நன்றாகும்.

### தூதுவளை

இருமல், சலரோகம் உட்குத்தல், மேலுளைவு இவை விலகும். இதன் வேரை வெற்றிலை பாக்குடன் உண்டுவர முத்தோசத்தையும் நீக்கும்.

இதன் இலையினை பட்சனம் செய்து உண்ணலாம். காய்களை வதக்கி கறியாக சமைத்து உண்ணலாம். இம்மரம் சாதாரணமாக வெப்பமான இடங்களிலும் நன்றாக வளரக்கூடியதாகும். அத்தோடு இதன் தண்டு இலைகளில் முட்கள் காணப்படும். இதனை நீக்கியே உணவில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

✦

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.*

- திருக்குறள்.

# நமது நோக்கு

## வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்...

தலைநகர் கொழும்பும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளும் மீண்டும் பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சிக்கால கெடு பிடிக் ளுக்குள் சிக்கத் தொடங்கியது போலத் தெரிகிறது.

1995 முதல் 2000 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதி வரையிலான ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஒரு விதமான யுத்தப் பிரகடனத்தின் கீழான சர்வாதிகாரத்தன்மை கொண்ட ஆட்சியின் ஆழுமையில் கொழும்பு மட்டுமென்ன நாட்டின் சகல பகுதிகளுமே ஆயுதப படையினரதும் அவர்களின் எடுபிடிகளாக இயங்கிய குழுக்களதும் கட்டுப்பாட்டின் கீழ் சந்தித்த அவலங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவைகளாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் முனைப்புடன் நடந்து கொண்டிருந்த வேளையில் உயிருக்கஞ்சி, பாதுகாப்புத் தேடி தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் சென்று பல்வேறு உளவியல் அழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்த தமிழ் இளைஞர்கள், யுவதிகளை குடும்பத்தினரை அவசரகால நிலமை பிரகடனப்படுத்தப்பட்டிருந்த சூழலில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஆயுதப் படையினரும், பொலிஸாரும் தேடுதல், சோதனை, சந்தேகம், கைது என்ற போர்வையில் செய்த அட்டூழியங்களும் சொல்லுந்தரமன்று.

நள்ளிரவில் கூட எந்தவித மனிதப்பண்புமின்றி திடீரென வீடுகளுள் நுழையும் படையினர் பால்வேறுபாடு, வயது வேறுபாடின்றி இரவு உடைகளுடன் ஈவு இரக்கமின்றி வீதிகளுக்கு வெளியேற்றி சோதனை என்ற பெயரில் செய்த இம்சைகளை நாடறியும் - உலகறியும்.

போர்க்களங்களில் பேரிழப்புக்களையும், தோல்விகளையும் சந்தித்த வேளைகளில் அவமானத்தாலும், ஆற்றாமையாலும் வெந்து நொந்த படையினரின் வெஞ்சினமானது அப்பாவித் தமிழ்மக்கள் மீது பழிவாங்கும் நோக்கில் பாய்வது இலங்கை அரச படையினரின் ஒரு மாறாக் கலாசாரமாகவே கடந்த அரைநூற்றாண்டு காலமாக இருந்து வந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் எனக் கைதாகும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் போன்றோர் காலவரையறையோ, விசாரணைகளோ இன்றி சிறைகளில் அடைக்கப்படுவதும், கைதான நிலையிலேயே காணாமற்போவதும், பாலியல் வல்லுறவுக் கொடுமைக்குள்ளாக்கப்படுவதும் ஏனையவர்கள் மிருகத்தனமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் இவையனைத்துமே மௌனமாகவும் மறைவாகவும் மறைக்கப்பட்டு புதைக்கப்படுவதும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கால ஜனநாயகப் பாரம்பரிய மாகவே இருந்து வந்ததை எவரும் மறந்து விடமுடியாது.

ஏன் கைதாகி விசாரணைகளின்றி அவர்களுக்கான சட்ட மற்றும் மனித உரிமைகள் ரீதியிலான அனைத்து வழிமுறைகளும் மறுக்கப்பட்டு விடுதலைக்காக ஏங்கி சிறைக்கூடங்களுள் உடலியல், உளவியல் சித்திரவதைகளை அன்றாடம் எதிர்கொள்ளும் நிலையில் இருந்த அப்பாவி இளைஞர்கள் சிறைக்குள்ளேயே நிராதரவான நிலையில் வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வுகளும் சந்திரிகாவின் தலைமையிலான பொ.ஐ. முன்னணி ஆட்சியின் பொற்காலத்தில் (?!) நிகழ்ந்தவைகளேயாகும்....

அக்காலத்தில் கொழும்பில் பஸ்தரிப்பு நிலையங்களை விடவும் இராணுவ - பொலிஸ் சோதனைச் சாவடிகளும் காவலரண்களும் அதிகமாக இருந்ததாக நக்கலாகக் கூறுவார்கள்.

அது ஒரு இடர் மிகுந்த இருண்ட மனித நேயம் மரணித்திருந்த காலமாகும்.

அந்தக் காலம் புதிய மிலேனிய மலர்வை அடுத்து ஆட்சி மாற்றத்துடன் மாறிய போது ஏற்பட்ட சமாதான சூழல் இரண்டாண்டு காலம் நீடித்த பின்னர் மீண்டும் சந்திரிகாவின் தலைமையிலான கூட்டணி ஆட்சிபீடம் ஏறியுள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத சமூகத்தவர்களுக்கு அமைதி - சமாதானம் என்ற சூழல் ஒவ்வாத்தன்மை கொண்டது போலும்.

மீண்டும் சமாதான எதிர்ப்பணியினருக்கே ஆட்சியுரிமையை கையளித்துள்ளார்கள்.

எனவே, தமிழ் மக்கள அச்சத்துடன் எதிர்பார்த்திருந்த சூழலுக்கான ஆரம்ப நிகழ்வுகள் தொடங்கிவிட்டன.

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் உத்தரவிடப்பட்டிருப்பதுடன் சந்தேக நபர்களைக் கைது செய்யவும், விசாரிக்கவும், காவலில் வைக்கவும் ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதன் போது பாதிப்புக்குள்ளாகப் போவது நிச்சயமாகத் தமிழ் மக்கள் தான் என்பதால் யாரும் இது பற்றிக் கண்டிக்கவோ, தட்டிக் கேட்கவோ போவதில்லை. அப்படிக் கேட்டாலும், கண்டித்தாலும் பலன் எதுவும் ஏற்படப் போவதுமில்லை.

வேதாளத்தை மீண்டும் முருங்கை மரத்தில் ஏறவிட்டாகிவிட்டது. இந்த நிலையில் மக்களின் - குறிப்பாக தமிழ் மக்களின் - இயல்பு வாழ்க்கை நிலைக்கு ஆப்பு வைத்தபடி சமாதானப்பாடலை சந்திரிகா பாடத்தொடங்கியுள்ளது தான் வேடிக்கையான முரண் நிலையாகும்.

## நாடும் நடப்பும்




# ஹெல உறுமய மீதான தாக்குதலை தமது கட்சி நடத்தவில்லையாம்

### மறுக்கிறது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

ஜாதிக ஹெல உறுமயக் கட்சி ஆதரவாளர்கள்மீது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தாக்குதல் நடத்துவதாகவும், அவர்களுக்கெதிராக பிரசுரங்களை ஒட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்ட கருத்தை, அந்தக்கட்சி திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தொடர்பாக முன்னணியின் தலைவர் நந்தனகுணதிலக மற் றும் சுசில் பிறேமஜயந்த இருவரும் கையெழுத்திட்டு வெளி யிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஹெல உறுமயவின் பிக்குகளுக்கெதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயற்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நாம் வன்மையாக மறுக்கின்றோம். இது வேண்டுமென்றே முன்னணிமீது வீண்பழிச்சொல்லை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சபாநாயகரை ஹெல உறுமய தெரிவுசெய்தமையையிட்டு, மக்கள் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர். இவர்களது இந்தக் கூட்டில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சேர்ந்துள்ளனர்.

எவ்வாறாயினும், ஹெல உறுமயவின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் எவரும் எவ்விதமான எதிர்ப்பையும் காட்டவில்லை. இருந்தும், ஹெல உறுமய மீதான தாக்குதலுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

நாட்டில் 2500 ஆண்டுகளாகவுள்ள புத்தசாசனத்தை நாம் பாதுகாத்து வருகின்றோம்.

எனவே, இந்த புத்தசமயம் மீதான தாக்குதல், அச்சுறுத்தல்களை அந்த சமயமில்லாதவர்களும், மற்றவர்களுமே மேற்கொள்கிறார்கள் எனத் தெரிவித்தனர்.

# இளைஞர் படையணித்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் உருவாக்கப்பட்ட இளைஞர் படையணியை அபிவிருத்தி செய்து, அதனை முன்னேற்றவுள்ளதாக தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான தொழிற்துறை பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வியறிவு என்பனவற்றை வழங்குவது தொடர்பான முடிவை இன்னும் சில தினங்களில் ஜனாதிபதி எடுக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப கல்வியறிவிற்கு ஆண்டு தோறும் மூன்று மில்லியன் ரூபாக்கள் செலவிடப்படவுள்ளதாகவும், இது பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான பயிற்சியே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் - இளைஞர் படையணி நிகழ்ச்சித்திட்டம் ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### யாழ். சிறைச்சாலையில்

# மலசலகூடக்குழி நிரம்பியது கைதிகளுக்கு பெரும் சிரமம்

யாழ். சிறைச்சாலையின் மலசலகூடக்குழி நிரம்பியிருப்பதால் கைதிகள் பெரும்சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.சிறைச்சாலையில் தற்போது 250 இற்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றபோதிலும், அது 80 வரையான கைதிகளையே கொள்ளக்கூடிய இடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும், இங்குள்ள மலசலக் கூடக் குழியானது குறிப்பிட்டநாட்களுக்கு ஒருமுறை சிறைச்சாலை அதிகாரியின் வேண்டுதலின் பேரில் யாழ்.மாநகர சபையினால் சுத்திகரிக்கப்பட்டு வருவது வழக்கம்.

இந்தமுறை சிறைச்சாலையில் நிதிவளம் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ்.சிறைச்சாலையின் மலசலக்கூடக்குழி நிறைந்து நீர் வெளியேறத் தொடங்கியுள்ளபோதிலும் இன்னமும் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான மாற்று ஒழுங்கும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், தற்போது அங்கு தொற்று நோய்கள் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான சரியான நடவடிக்கை எடுக்கப்படாது விட்டால், பல தொற்றுநோய்கள் பரவவாய்ப்பிருப்பதாக யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு எச்சரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# லயன்ஸ் கழகங்களின் கண் வைத்தியசாலை

### பாணந்துறையில் அமைக்கப்படும்

(கொழும்பு)

லயன்ஸ் கழகத்தின் முதலாவது கண் வைத்தியசாலை பாணந்துறையில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் இன்று வெள்ளிக்கிழமை நாட்டப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லயன்ஸ் கழகங்களின் சர்வதேச பணிப்பாளர் மகேந்திர அமரதுரிய இது குறித்து தகவல் வெளியிடுகையில் -

இந்த கண் வைத்தியசாலையில் விழிவெண்படல சத்திர சிகிச்சைகள் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

# மணற்காட்டில் சவுக்கு வெட்டுவதைத் தடுக்க பொலிஸ் இராணுவத்தினர் நடவடிக்கை

மணற்காடு குடத்தனைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சவுக்குமரங்களை வெட்டி விறகுக்காக கடத்தப்படும் சம்பவங்களைக் கண்காணிக்கவென அப்பகுதியில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமையால் அப்பகுதியில் மரங்கள் வெட்டப்படுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மேலும் இந்தப் பகுதியிலுள்ள மரங்களை வெட்டவேண்டும எனப் பொலிஸாரும் இராணுவத்தினரும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். இந்தக் கட்டளையை மீறுவோரைக் கைதுசெய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த 20 ஆம் திகதி விறகு வெட்ட முற்பட்ட நபர்கள் நால்வரைக் கைதுசெய்ததுடன், 4 சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளதுடன், அதே தினத்தில் மேலுமொரு குழுவையும் கைதுசெய்ததுடன், 15 சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004 ஏப்ரல் மாதிரி வினாத்தாள்

## பௌதீகவியல் II

4. பகுதி a) அல்லது b) இற்கு மட்டும் விடை தருக.

a. உயர் அழுத்த வேறுபாட்டை பெற்றுக்கொள்வதற்கான அமைப்பு ஒன்றினை படம் காட்டுகின்றது. அழுத்த வேறுபாட்டு முதல் ஒன்று P,Q இற்கு இடையில் இணைக்கப்பட்டு தூரிகை y இன் மூலம் ஏற்றம் பட்டு நாடாவிற்கு இடமாற்றப்படுகின்றது. மின் மோட்டாரின் உதவியுடன் நாடா ஆனது படத்தில் காட்டப்பட்டுள்ள திசையில் இயங்கச் செய்யப்படும் போது நாடாவிற்கு இடம்மாற்றப்பட்ட ஏற்றம் தூரிகை x, இன் மூலம் பொட்கோளம் A இன் மேற்பரப்பிற்கு ஏற்றம் இடம்மாற்றப்படுகின்றது.




I. நிலைக்குத்துத் தாங்கிகள், பொட்கோளம் என்பன எவ்வகை பதார்த்தத்தால் ஆக்கப்பட்டிருக்கும்.

II. பட்டு நாடாவின் அகலம் 5 cm ஆகும். நூடா ஆனது $0.6ms^{-1}$ வேகத்துடன் இயங்குகின்றது. நாடாவின் வெளிப்புறத்தில் மட்டுமே ஏற்றம் பரம்பியுள்ளது எனக் கருதி நாடாவின் மீதான ஏற்றப்பரப்படர்த்தி $2ΙUCm^{-2}$ ஆயின் 8.0 செக்கனில் பொட்கோளம் A யின் மேற்பரப்பிற்கு இடம்மாற்றப்படும் ஏற்றத்தின் அளவைக் காண்க.

III. 8.0 செக்கனில் A இன் மேற்பரப்பில் உள்ள மின்னழுத்தம் யாது? கோளத்தின் ஆரை 10cm எனக் கொள்க.

IV. ($\varepsilon^{o} = 8.85x10^{-12}Fm^{-1}$)

V. பகுதி II இல் உள்ள ஏற்றம் முழுவதும் 30 ιιs இல் மின்னிறக்கம் அடைகிறது.
   a. மின்னிறக்கத்தின் போது. சராசரி மின்னோட்டம் யாது?
   b. மின்னேற்றமும் மின்னிறக்கமும் தூரிகைகள் y, x இன் மூலம் சீராக நடைபெறுகின்றன. ஆனால் கீழ் உள்ள சுழலியின் வேகம் மின்னிறக்கத்தின் பின்னர் சடுதியாக சற்று அதிகரிக்கிறது விளக்குக.

b. ஹோலின் விளைவு என்பதனை விளக்குக?




படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோல் I அம்பியர் மின்னோட்டம் காவும் செவ்வகக் கடத்தி ஒன்று சீரான காந்தப்பாய அடர்த்தி B இற்கு செங்குத்தாக வைக்கப்பட்டுள்ளது.

I. படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்து ஏற்றக் காவியில் தொழிற்படும் விசைகளைக் குறிக்க?

II. ஹோலின் அழுத்த வேறுபாடு $V_H$ இற்கான கோவையை பெறுக? (பயன்படுத்தப்படும் குறிகளை அடையாளப்படுத்துக.)

III. இக்கடத்தியினூடான மின்னோட்டம் I இற்கான கோவையை எழுதுக?

IV. 4mm தடிப்புடைய ஒரு செவ்வகக் கடத்தியினூடு 0.5A மின்னோட்டம் பாய்கின்றது. இப்பகுதிக்கு செங்குத்தாக 0.2 T காந்தப்புலம் பிரயோகிக்கப்படுகின்றது. எதிர் ஓரங்களுக்கு இடையில் 6mV ஹோல் அழுத்த வேறுபாடு உருவாக்கப்பட்டது. அலகுக் கனவளவிலுள்ள ஏற்றக் காவியின் எண்ணிக்கையைக் காண்க? (இலத்திரனின் ஏற்றம் $16x10^{-19}$ C )

V. ஹோலின் விளைவின் பிரயோகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

5.a) அல்லது b) இற்கு மட்டும் விடை தருக.

a) கிர்க்கோப்பின் விதிகளை எழுதுக.




படத்தில் காட்டப்பட்டுள்ள சுற்றில் கலம் புறக்கணிக்கத்தக்க அகத்தடை உடையது.

I. ஆளிகள் $S_1$, $S_2$ திறந்துள்ள போது ஒவ்வொரு கொள்ளளவிகளுக்கும் தடைகளுக்கும் குறுக்கேயான அழுத்த வேறுபாடுகளை எழுதுக. உமது விடைக்கான காரணங்களைத் தருக.

II. a) ஆளி $S_1$ மூடப்பட்டு $S_2$ திறந்திருக்கும்போது கொள்ளளவிகள், தடைகளிற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடுகளைக் காண்க.

b) ஆளி $S_2$ மூடப்பட்டு $S_1$ திறந்துள்ள போது கொள்ளளவிகள், தடைகளிற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடுகளைக் காண்க?

III. ஆளிகள் $S_1 S_2$ மூடப்பட்டுள்ள போது கொள்ளளவிகளில் சேமிக்கப்பட்ட மின்சக்தியைக் காண்க.

IV. a. ஆளி $S_1$ மூடப்படும் கணத்தில் $S_1$ இனூடு எத்திசையில் மின்னோட்டம் பாயும்.
   b) ஆளி $S_2$ மூடப்படும் கணத்தில் $S_2$ இனூடு எத்திசையில் மின்னோட்டம் பாயும்.

5. b) ஒளிமின் விளைவு என்றால் என்ன?

a) i. ஒளி மின் விளைவுக்கான ஐங்ஸ்ரீனின் சமன்பாட்டை எழுதுக. (குறியீடுகள் தரப்படுதல் வேண்டும்.)




A - திரை
B - நிலைக்குத்து மெலித்தி
C - பரவை வீச்சுத்தேரி.
D - கிடை அமைவு ஆளுகை
E - நிலைக்குத்து அமைவு ஆளுகை

முதலில் CRO இற்கு வலுவழங்கல் செய்யப்பட்டு CRO இலுள்ள வழங்கல் ஆளியை (POWER) மூடுவதன் மூலம் மின் வழங்கப்படும்.

வலுவழங்கப்பட்டு சிறிது நேரத்தில் திரையில் ஒளிப்பொட்டு அல்லது ஒளிக்கோடு தோன்றும். ஒளிக்கோட்டின் செறிவானது ஒளிச் செறிவுக்கட்டுப்படுத்தி (Intensity control) மூலம் செறிவு குறைக்கப்பட்டு மெல்லிய கோடாக வருமாறு குவித்தல் (Focus) ஆளி மூலம் குவியப்படுத்தப்பட்டு பின்னர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

i. C.R.O இன் பயன்பாட்டை அறிவதற்கு தேவையான உபகரணங்களைத் தருக?

ii. C.R.O இற்கு வலு வடங்களைத் தொடுப்பதற்கு முன்னர் C.R.O இல் மேற்கொள்ள வேண்டிய முக்கிய செயற்பாடு யாது?

iii. C.R.O வை பயன்படுத்த முன்பு செப்பன் செய்ய வேண்டிய அடிப்படை செய்கைகள் யாவை?

iv. சைகை பிறப்பாக்கி மூலம் பிறப்பிக்கப்படும் சைகைகள் (input) C.R.O இற்கு வழங்கப்படும் பகுதிகள் எப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளன.

v. சைகைப்பிறப்பாக்கி மூலம் C.R.O இற்கு பெய்ப்பு வோல்ற் அளவு (Sin வளையி) வழங்கப்பட்ட பின்னர்.

a) அலை வடிவத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு.

b) போதிய வீச்சத்தை தெரிவு செய்வதற்கு.

c) ஆலை வடிவத்தை சமச்சீராக பேணுவதற்கு பயன்படுத்த வேண்டிய பகுதிகளை பெயரிடுக.

d) தரப்பட்டுள்ள C.R.O இன் திரையின் பரிமாணம் யாது?

vi. C.R.O இல் பெறப்பட்ட அலை வடிவமும் பகுதிகள் B,C இல் உள்ள காட்டிகளின் அமைவு நிலையும் கீழே தரப்பட்டுள்ளது.




e) ஆடலோட்டத்தின் உச்ச அழுத்த வேறுபாடு யாது?

f) ஆடலோட்டத்தின் அதிர்வெண் யாது?

vii. கதோட்டுக்கதிர் அலைவு காட்டியின் பயன்பாடுகள் மூன்று தருக.

6 b) வெப்ப இயக்கவியல் பூச்சிய விதியையும் முதலாம் விதியையும் எழுதுக.

a) $1.04 x10^5$ pa அமுக்கத்திலும் 297 K வெப்பநிலையிலும் 0.200 mol வாயு டீசல் எஞ்சினுள் செலுத்தப்படுகின்றது. செலுத்தப்பட்ட வாயுவின் கனவளவு யாது?

b) பின்னர் வாயுவானது கனவளவின் 1/10 பங்கிற்கு நெருக்கப்படுகின்றது. வாயுவின் அமுக்கம் $6.89 x 10^6$ pa ஆயின் வாயுவின் புதிய வெப்பநிலையைக் காண்க.

c) எஞ்சினுள் உள்ள சிறிதளவு எரிபொருள் எரிவதால் 6150 J சக்தி பிறப்பிக்கப்படுகின்றது. வாயுவின் அமுக்கம் ($6.89 x 10^6$ pa) மாறாது அதன் கனவளவு அதிகரிக்கின்றது. அத்துடன் வாயுவின் வெப்பநிலை 2040 K ஆகின்றது.
பின்வருவனவற்றைக் காண்க

i. மாறா அமுக்கத்தில் வாயுவின் மூலர் தன்வெப்பக்கொள்ளளவு

ii. எரிபொருள் எரிந்த பின் வாயுவின் கனவளவு

iii. வாயு விரிவதனால் செய்யப்பட்ட வேலை.

iv. வாயுவின் உட்சக்தி அதிகரிப்பு

(அகில வாயு மாறிலி 8.3 $Jmol^{-1}K^{-1}$ எனக் கொள்க.)
( வாயு இலட்சிய வாயு போன்று தொழிற்படுகின்றது)

**S.கருணாநிதி B.sc ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி**

## குறுவட்டுகளின் (CD) தொழில்நுட்ப வளர்ச்சியில் 'எம்பி3' இணையப்பாவனையில் பெரும்புரட்சியை ஏற்படுத்தியுள்ளது

$MP_3$ - (M.sic $Protocol_3$) என்றால் என்ன? அது எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை நீங்கள் அறிய ஆவலாக இருப்பீர்கள். ஏனெனில் இன்றைய ஊனு உலகில் mp3 என்ற வாசகம் எல்லோருடைய வாய்களிலும் ஒலித்த வண்ணமே உள்ளதைக் காணலாம். ஆனால் அதன் தார்ப்பரியத்தினைப் புரிந்துகொண்டவர்கள் மிகக் குறைவானவர்களாகவே காணப்படுகின்றனர்.

சாதாரண ஒரு பாடலுக்கு ஏறத்தாழ 50 mp தேவைப்படுகின்றது. mp3 முறையில் ஒரு பாடலுக்காக ஏறத்தாழ 4 mp தேவைப்படுகின்றது. சாதாரணமாக 13 அல்லது 14 பாடல்களைப் பதிவு செய்து பயன்படுத்தலாம்.

ஒரு mp3 - உன ஆனது பத்து அல்லது 15 சாதாரண cdகளுக்கு நிகராகும். mp3 இசைக்கு எவ்வாறு இவ்வளவு குறைந்த இடம் தேவைப்படுகின்றது எனப்பார்க்கம்போது சாதாரண மனிதனால் 20 mhz தொடக்கம் 20000 mhz வரையான ஒலி அலைகளையே கேட்டு உணரமுடியும்.

அதிலும் இதில் எல்லா அதிர்வுகளையும் எம்மால் துல்லியமாக உணரமுடியும். எனவே மனிதனால் கேட்கக்கூடிய ஒலிஅலை அதிர்வெண்கள் பிரித்தெடுக்கப்பட்டு அவை mp3 முறையில் சுருக்கி எழுப்பப்படுகின்றது.

எனினும் இதன் மூலம் ஏற்படும் ஒலிநய இழப்புக்கள் தவிர்க்கமுடியாதது. பொதுவாக இவ்வகை mp3 முறையில் (12:10 என்ற விகிதத்தில் சுருக்கி எழுதப்படுகின்றது. இங்கு 12mp3 ஆனது 1mp ஆக குறைக்கப்படுகின்றது. இந்த விகிதம் குறையும்போத (உ-ம் :- 10:1, 18:1) இசையின் தரமும் உயர்வதோடு பாடலுக்கான இடமும் கூடுதலாக தேவைப்படுகின்றது.

இணையப் பாவனையில் mp3 பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றது . பாடல்களை இணையத்தளத்திலிருந்த வேகமாகப் பதிவிறக்கம் செய்யக்கூடியதாக இருப்பதுடன் கணினியில் சேமிக்கும்போது குறைந்த இடத்தை எடுப்பது இதன் சிறப்பாகும்.

mp3 முறையில் உருவாக்கப்பட்ட பாடல்களை அதற்கென உருவாக்கப்பட்ட mp3 player இல் கேட்டு ரசிக்கமுடியும். இவ்வாறான mp3 பிளேயர்களை இலங்கையில் சாதாரணமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும். நீங்கள் வானொலியில் விரும்பிய பாடல்களைக் கேட்க உடனடியாக எவ்வாறு ஒலிபரப்புவது சாத்தியமாகின்றது. என்பது என்ன? தெரிந்த விடயம் தெரியாத விளக்கமெல்லவா இது. இப்படித்தான் பலவற்றை நாம் தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் விளங்கிக் கொள்வதில்லை. இது தொழில்நுட்பத்துக்கும் சரி வாழ்க்கைக்கும் சரி மிகப் பொருத்தமானதே.

ஜெயா

## கொலம்பியாவில் பரிதாபம்

# பாடசாலை பேரூந்து மீது புல்டோசர் மோதி 23 பேர் பலி!

பாடசாலை பேரூந்தொன்று புல்டோசரினால் நசுக்கப்பட்டதனால், 21 சிறுவர்கள் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர். மேற்படி இந்தத்துயரச்சம்பவம் கொலம்பியாவின் தலைநகரான பொகோராவில் இடம்பெற்றது.



மலைப் பாதையில், வீதித் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த புல்டோசர் - பாதையில் இருந்து விலகி வீதியால் சென்று கொண்டிருந்த பேரூந்து மீது மோதியதால், இந்த விபத்து நடந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்தில் 36 சிறுவர்கள் படுகாயமுற்றதாகவும், அதில் - சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது மிகவும் பரிதாபகரமான சம்பவம் என பொகோடா மேயர் லூயிஸ் எட்லார்டோ கரசோன் தெரிவித்தார்.

மீட்புக்குழுக்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அதே வேளை - பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்களைத் தடுத்து நிறுத்தும் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 7 தொடக்கம் 12 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட 40 தொன் எடையுள்ள புல்டோசர் மலையிலிருந்து சடுதியாக கீழ்நோக்கி வந்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது.

பொலிஸ் பேச்சாளர் அல்பேட்டோ கன்ரிலோ இதைப் பற்றி கூறும்போது- ஆரம்ப விசாரணைகளின்படி, புல்டோசரின் பிறேக் சரியான முறையில் இயங்காததால் சாரதி புல்டோசரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனதாகவும், இதனால் புல்டோசர் பாதை மாறி கீழே வந்ததாகவும் தெரிவித்தார்.

# அமெரிக்க பிரஜைகள் எவரும் இஸ்ரேலுக்கு செல்ல வேண்டாம்!

## இராஜாங்கச் செயலகம் தெரிவிப்பு



அமெரிக்கா தனது நாட்டு மக்களை இஸ்ரேலுக்கு செல்ல வேண்டாமெனவும் காஸாவில் இருக்கும் அமெரிக்கர்களையும் உடனடியாக வெளியேறுமாறும் கேட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் - ஹமாஸ் இயக்கம் அமெரிக்கா மீது விடுத்துள்ள அச்சுறுத்தலையடுத்தே இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு ஹமாஸ் தலைவர்கள் இஸ்ரேலியப் படையினரால் அண்மையில் கொல்லப்பட்ட நிலையில் இதன் எதிரொலிப்பே தற்போதைய பதட்டநிலை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹமாஸ் இயக்கத் தலைவர்களை இஸ்ரேல் கொன்றதன் காரணத்தினால் அந்த அமைப்பும் மற்றும் முஸ்லிம் தீவிரவாதிகளும் அமெரிக்கா மேல் தமது கவனத்தை திருப்பியுள்ளனர்.

எனவே அமெரிக்கர்கள் இஸ்ரேலுக்கு பயணம் செய்வது பாதுகாப்பல்ல என்றும், உடனடியாக சகல அமெரிக்கர்களும் காஸாவை விட்டு வெறியேறுவது நல்லது என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை - அமெரிக்கர்கள் கொல்லப்படலாம் அல்லது கடத்தப்படலாம் எனவும் அந்தச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.




# விமானத்தை சுட்டு வீழ்த்த உதவியவருக்கு ரஷ்ய நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது!

அளவுக்கதிகமான துருப்பினரை ஏற்றிச்சென்ற எம் - 26 உலங்கு வானூர்தியை சுட்டு வீழ்த்துவதற்கு உதவினார் என குற்றம்சாட்டப்பட்ட



செச்னியாவைச் சேர்ந்த 27 வயதுடைய டோகு டிசன்ரிமிரெவ் என்ற நபருக்கு ரஷ்ய நீதிமன்றம் ஆயுட் தண்டனை வழங்கியுள்ளது.

ரஷ்யாவின் இராணுவ வரலாற்றில் மிக மோசமான சம்பவம் என வர்ணிக்கப்படும் இந்தச் சம்பவம் கடந்த இரண்டாயிரம் ஆண்டு செச்னிய தலைநகரமான குரோஸ்னிக்கு அண்மையில் உள்ள இராணுவத் தளத்தில் இடம்பெற்றது.

127 துருப்பினர் கொல்லப்படுவதற்கு காரணமான இச்சம்பவத்தின் போது உலங்கு வானூர்தியைச் சுட்டு வீழ்த்துவதற்கு உதவியாக இடத்துக்கிடம் காவிச் செல்லக்கூடிய ஏவுகணையை குறிப்பிட்ட தளத்திற்கு எடுத்துச்செல்ல டிசன்ரிமிரெவ் உதவினார் என்றும் ரஷ்யாவின் இன்ரர்பாக்ஸ் நிறுவனத்தின் வேண்டுகோளின்படி தாக்குதல் சம்பவத்தை ஒளிப்பதிவு செய்தார் எனவும் ரொஸ்ரோல் - ஒன் - டொன் என்ற நகரிலுள்ள ரஷ்ய நீதிமன்றம் குற்றம் சாட்டியிருந்தது.

குற்றவாளியான டிசன்ரிமிரெவ் சம்பவத்தின்போது இறந்த ஒவ்வொருவருக்கும் தலா 3000 அமெரிக்க டொலர்களையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு 1750 அமெரிக்க டொலர்களையும் வழங்கவேண்டும் என ரஷ்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

80 பயணிகளை மட்டும் ஏற்றக்கூடிய இந்த உலங்குவானூர்தியில் 140 துருப்புக்களை ஏற்றிச் சென்றமை தொடர்பாக ரஷ்ய இராணுவ தரப்பில் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

## இந்தோனேஷியச் சிறையிலிருந்து இன்று

# விடுதலை செய்யப்படவுள்ள அபூபக்கர் மீளவும் கைதுசெய்யப்படவுள்ளாராம்!

## அந்த நாட்டு பொலிஸார் தெரிவிப்பு



இந்தோனேஷிய சிறையிலிருந்து இன்று விடுதலைசெய்யப்படவுள்ள ஜெமா இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவின் தலைவரான அபூபக்கர் பசயிரை தாம் மீளவும் கைதுசெய்யவுள்ளதாக இந்தோனேஷியப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடிவரவு தொடர்பான குற்றங்களுக்காக 18 மாதங்கள் அபூபக்கருக்கு சிறைத்தண்டணை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், இவர் தனது குற்றங்களை தொடர்ந்தும் மறுத்து வந்துள்ளார். தொடர்ந்து இவர் மீது மேற கொள்ளப்பட்ட விசாரணைகளில் தீவிரவாதத்துடன் தொடர்புடையவர் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், இவரை மீண்டும் கைது செய்வதற்கு பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தீவிரவாதிகளின் செயற்பாடுகளில் ஆன்மீகத் தலைவர் அபூபக்கருக்குத் தொடர்பிருப்பதாக சான்றுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன்னர் இவர் மது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், இவர் தகவல்களை வழங்குவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, இன்று சிறையிலிருந்து அபூபக்கர் விடுவிக்கப்படவுள்ளார் என்ற தகவலை அறிந்த அவரின் ஆதரவாளர்கள் சிறைச்சாலைக்கு வெளியே கூடியுள்ளனர்.

இவர் விடுவிக்கப்பட்டதும் மீண்டும் கைதுசெய்யப்படுவார் என பொலிஸ் பேச்சாளர் பஷீர் பார்மவி தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் பாலியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் ஒன்றில் 202 அவுஸ்ரேலிய உல்லாசப் பயணிகள் கொல்லப்பட்டதை அடுத்து அபூபக்கர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

ஆனால், அந்தக் குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்புடையவர் என இவர் மீது குற்றம் சுமத்தப்படவில்லை.

## ஈராக்கிற்கு மேலதிகமாக

# இராணுவ வாகனங்களை அமெரிக்கா அனுப்பியது!

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படைக்கெதிராக செயலர் நடத்தப்படும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கனரக தாங்கிக



ளையும் கவச வாகனங்களையும் அமெரிக்கா ஈராக்கிற்கு அனுப்பியுள்ளது. ஈராக்கில் பணிபுரியும் அமெரிக்கப் படையதிகாரிகளின் வேண்டுதலுக் கிணங்கவே இவை அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரை ஈராக் தொடர்பாக



அமெரிக்கா கொண்டுள்ள கருத்துக்களை மாற்றி தந்திரப்போக்கினை கடைப்பிடிக்க முயன்றுவருவதாக பி.பி.ஸியின் நிக்சைட் தெரிவித்தார்.

அத்துடன் பலூஜாவில் முஸ்லிம் பயங்கரவாதிகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா கூடுதலான கனரக ஆயுதங்களை அனுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பலூஜாவில் அமெரிக்கா மேற்கொள்ளும் போர் முயற்சிகளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் கோபி அனான் கண்டித்துள்ளார். இதன் மூலம் ஈராக்கின் நிலை மோசமடையலாமென தெரிவித்தார்.

கூடுதலான பொதுமக்கள் பாதிக்கப்படும்போது அமெரிக்க எதிர்ப்புணர்வுகள் அதிகரிக்கலாமெனவும் தெரிவித்தார். இக்கருத்துக்கு மாறாக




பலூஜாவை மீட்டெடுப்பதற்கு வேண்டிய எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அமெரிக்க இராணுவம் தயாராக உள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

பலூஜாவில் 2000 வரையான பயங்கரவாதிகள் அமெரிக்க கடற்படையின் முற்றுகைக்குட்பட்டுள்ளனர். பலூஜாவில் போர்முயற்சிகள் ஆரம்பிக்கும்போது கனரக ஆயுதங்கள் தேவைப்படவில்லை. பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதால் கூடுதலான துப்பாக்கிவலு தேவைப்படுகிறது. இதனால் போர்முனையில் கனரக ஆயுதங்கள் பாவிக்கப்படவேண்டியுள்ளது.

# தாய்லாந்தில் கலகம் நடந்த இடத்திற்கு மேலதிகமாக படைகள் அனுப்பப்பட்டன!



(தாய்பேய்)

தாய்லாந்தின் தென் மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அந்தப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் மேலதிகமான படைகள் அனுப்பப்பட்டுள்ளன.

துப்பாக்கி ஏந்திய தீவிரவாதக் குழு ஒன்று உருவாகி வருவதாக உயர் இராணுவ படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், தாய்லாந்து பிரதமர் - குற்றச்செயல், வன்முறைக் கும்பல் ஒன்றினால் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

வலதுசாரி அமைப்புக்களும், முஸ்லிம் தலைவர்களும் இந்தத் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் மேற்கொண்டிருந்த வழிமுறைகளை கண்டித்துள்ளனர்.

இதேவேளை - மேலும் தாக்குதல்கள் நிகழ்த்தப்படும்போது, அதனை எதிர்கொள்வதற்குப் படையினர் உஷார் நிலையில் இருக்க வேண்டுமென தாய்லாந்தின் பாதுகாப்பு அமைச்சர் செற்றா தனயறோ தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்குக்கு இராணுவ ஜெனரல் பலோப் பிமானி ஆதரவு தெரிவித்துள்ளார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கும்போது - தனது கணிப்பின் பிரகாரம் ஆயிரக்கணக்கான காடையர்கள் போராளிக் குழுவில் இணைந்துள்ளார்கள் எனவும், முஸ்லிம் பிரிவினைவாதிகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தாக்குதல் நடத்தியவர்கள் ஏ.கே-47 துப்பாக்கிகளையும், எம்.16 ரகத் துப்பாக்கிகளையும் பாவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே - நியூயோர்க்கை மையமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை அவதானிப்பு மையம் தெரிவிக்கையில், சிறிய துப்பாக்கி ஏந்திய குழுவை அடக்குவதற்கு பாரிய இராணுவப் படை தேவைதானா என்பதை விசாரிக்க வேண்டும் என கேட்டிருந்தது. அத்துடன், அவ்வாறான தாக்குதல் முயற்சி நடைபெறவுள்ளதெனத் தெரிந்தால், முன்னரே அவர்களைக் கைது செய்திருக்கலாமெனவும் மனித உரிமைகள் அமைப்பின் பணியாளர்கள் தெரிவித்தனர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## தெஹிவளை சுற்றிவளைப்பு 15 தமிழர்கள் கைதாகினர்!

(கொழும்பு)

தெஹிவளைப் பகுதியில் நேற்று மாலை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது ஆண்கள், பெண்கள் அடங்கலாக 15 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தெஹிவளைப் பகுதியிலுள்ள வைத்தியா வீதிக்கும், சிறிமகா போதி வீதிக்கும் இடையிலேயே இந்த சுற்றிவளைப்புத் தேடுதல் நேற்று மாலை நடத்தப்பட்டது. இதன்போது அப்பகுதியிலுள்ள வீடுகளிலிருந்த ஆண், பெண் 15 தமிழர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அனைவரும் தெஹிவளைப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். இவர்களில் ஆண், பெண் அடங்கலாக 9 பேர் நேற்றிரவே விடுதலை செய்யப்பட்டனர். மிகுதியாக 6 ஆண்கள் தொடர்ந்தும் தெஹிவளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் இந்த திடீர் சுற்றிவளைப்புக்கும் கைதிற்கும் எந்த விதமான காரணமும் தெரிவிக்கப்படவில்லை. (01)

## விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்குமாறு வலியுறுத்தி மாபெரும் ஆசிரியர் சங்கமம்!

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி மே தினத்தன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாபெரும் ஆசிரியர் சங்கம நிகழ்வொன்றை நடத்த யாழ்.மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் எஸ்.பஞ்சலிங்கம் தெரிவித்திருப்பதாவது -

கடந்த 2000 ஆம் ஆண்டுமுதல் தமிழர் ஆசிரியர் சங்கம் - தமிழர் சுயநிர்ணய உரிமையையும், தமிழரின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதையும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேசவேண்டும் என்பதையும் வலியுறுத்தி பல போராட்டங்களை, நடத்தி வந்தது.

அதன்பலனாக அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

எனினும் ஏனைய இரண்டு கோரிக்கைகளையும், அரசு இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இது தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

இது தொடர்பாக பல வேண்டுகோள்களையும், நாம் முன்னைய அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தோம். இதுவரையில் அதற்கான எந்தவித நன்மை தரும் பதிலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள அரசிடம் நாம் ஒருமித்த குரலில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை உடனடியாக வழங்குமாறு கோரி மே மாதம் முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பெரும் எடுப்பிலான அதிபர், ஆசிரியர் சங்கம நிகழ்வொன்றின் மூலம் பெரும் வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### புலிகள் - படைத்தரப்பு சந்தித்து பேச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமான மாதாந்த சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்பு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், படைத்தரப்பில் யாழ்.மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும் கலந்துகொண்டனர்.

## கந்தப்பளை வன்முறைச் சம்பவங்கள்; பிரதமர் மஹிந்த கவலை தெரிவிப்பு!

நுவரெலியா - கந்தப்பளை நகரிலும் ஏனைய தோட்டப் புறங்களிலும நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் சார்பில் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று பிரதமர் கந்தப்பளை மஹிந்த மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நல்லிணக்கக் கூட்டத்தில் பங்கேற்றார்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் கந்தப்பளைக்குச் சென்ற அவர், அங்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தரப்பினரையும், பெருந்தோட்டத்துறையின் தொழிலாளர் தலைவர்களையும் சந்தித்தார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்த் தரப்பினர், படையினர் எப்போதும் தமிழர்களுக்கு எதிராகவே துப்பாக்கிகளைத் திருப்புவதாகக் குற்றம் சுமத்தினர்.

இந்தக் கருத்தை அங்கு சமுகமளித்திருந்த மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரனும் வெளியிட்டார். இந்தச் சம்பவத்தில் படையினரும் பொலிஸாரும் பக்கச்சார்பாகவே நடந்துகொண்டதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தற்சமயம் அங்கு அமைதி நிலவுகின்றபோதும் பதற்றம் காணப்படுவதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்கிரமரட்ண கந்தப்பளைப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இவர் தமது விசாரணைகளை உடனடியாகவே ஆரம்பித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் பொலிஸ், மற்றும் பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் நோனா தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜெயராம், மற்றும் பாக் தோட்டத்தைச் சேர்ந்த விமல் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, பாக் தோட்டத்தைச் புஸ்பராஜ், மகேந்திரம், அருணாசலம் மற்றும் கதிர்காமர் ஆகியோர் காயமடைந்தனர். வீடுகள் மற்றும் கடைகள் என்பன சேதப்படுத்தப்பட்டன.

## இடம்பெயர்ந்த பொதுமக்கள்...

ஏற்படுத்த முடியாது.

இது சம்பந்தமாக பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் மேலும் பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. நீண்டகாலமாகத் தொடரும் இந்த் மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வைக்காண புதிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

இந்த நிலையில் இலங்கையில் அனைத்துத் தரப்புக்களும் நன்மை பெறும்போது மாத்திரமே சமாதான நல்வாழ்வு ஏற்பட வாய்ப்புள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டின்படி போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னர் 3 லட்சத்து 60 ஆயிரம் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

ஏற்கனவே சுமார் 3 லட்சத்து 70 ஆயிரம் மக்கள் வீடுகள் இன்றியும் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் அகதிகளாயும் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் சுமார் 2 ஆயிரத்து 543 பேர் தமது இடங்களுக்குத் திரும்பினர். இதுவே போர்நிறுத்தத்தின் பின்னர் ஆகக்குறைந்த தொகையினர் வீடுகளுக்குத் திரும்பிய சந்தர்ப்பமாகும். திரும்பும் அகதிகளுக்கு இடப் பிரச்சினை பாரிய தடையாக இருக்கின்றது.

மீளத்திரும்பும் மக்கள் தமது இருப்பிட உரிமைகள் தொடர்பாகவும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் மனிதாபிமானம் அரசியலுக்காக பணயம் வைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் டென்னிஸ் மேலும் தெரிவித்தார்.(01)

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அம்பாறையில் புலிகளுடன் சந்திப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறு பாவட்டா பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் மக்கள் தொடர்பாடல் மண்டபத்தில் விடுதலைப்புலிகளுக்கும், அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது!.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஜனார்த்தனன் மற்றும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகிய இருவரும் கலந்து கொண்ட அதேவேளை - அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பதில்த் தலைவர் ஒக்ஸ்ரா தலைமையிலான குழுவும் கலந்து கொண்டது.

இந்தச் சந்திப்பில் - போர்நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பதறகு தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவினரிடம் உறுதியளித்தனர்.

இதேவேளை - அம்பாறை மாவட்டத்திலுள்ள படை அதிகாரிகளுடனும்,முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் நீண்ட நாட்களாக விடுதலைப் புலிகள் சந்திப்புக்களை நடத்தவில்லையென அவர்கள் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளதாக கண் காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஒக்ஸ்ரா விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தார்.

வெகுவிரைவில் இவர்கள் இரு பகுதியினரையும் தாம் சந்திப்பதாக புலிகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்

இதனையடுத்து, நேற்று மாலை 2.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையின் இனப்பிரச்சினைத்...

நேற்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஷ்வந்த் சின்ஹாவைச் சந்தித்தபோதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பின்பின்னர் லக்ஷ்மன் கதிர்காமர் செய்தியாளரிடம் பேசுகையில் -

இன்றைய அரசியல் சூழலில் இலங்கையில் அமைதி முயற்சிகளில் இந்தியா பங்கேற்கவேண்டும் என்று உணர்கிறேன்.

இந்தியாவும் இன்னும் தம்மால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற உணர்வினைப் புரிந்துகொள்ள முடிந்தது.

நோர்வே உயர்மட்டக் குழுவினர் நாளை சனிக்கிழமை கொழும்பில் தீவிர பேச்சுக்களை நடத்தி அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

இந்த விஜயம் பலபக்க நோக்கங்களைக் கொண்டது. இது எனது முதல் பல்நோக்க விஜயமாகும்.

இந்தியாவிலோ இலங்கையிலோ எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எமது உறவு - வலுவான நல்லெண்ணம் கொண்ட உறவு.

இந்த விஜயத்தில் மற்றைய இந்தியத் தலைவர்களிடமும் இரு பக்க உறவுகள் குறித்து வலியுறுத்தியுள்ளேன்.

பொருளாதார ரீதியில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் வலியுறுத்துகிறேன்.

அத்துடன் கொச்சி - கொழும்பு கடற்போக்குவரத்தை ஆரம்பிக்கவும் விரும்புகிறோம்.

தற்போதைய சூழ்நிலையில் நோர்வேயின் அனுசரணை எமக்குத் தேவை. அவர்களுடன் இணைந்தே பேச்சுக்களை நடத்துவோம்.

ஆனால் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னர் எமக்கு அவர்களின் நிலைப்பாடு என்ன என்பது பற்றித் தெரியவேண்டும்.

கருணாவை அரசாங்கம் மறைத்து வைத்திருக்கவில்லை. மட்டக்களப்பிலிருந்து கருணா தப்பிச்செல்ல ஐ.தே.கவைச் சேர்ந்த முன்னாள் முஸ்லிம் அமைச்சர் ஒருவரே உதவினார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஷ்ராவையும் கதிர்காமர் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சமாதான....

நீடித்த தீர்வு என்பது உள்நாட்டு அரசியல் விதிமுறைகளின் வாயிலாகவே எட்டப்பட வேண்டும் என்று இந்தியா நம்புகிறது.

ஒன்றுபட்ட இலங்கை என்ற வரையறைக்குள் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பேச்சுவார்த்தை மூலமான உடன்பாடு இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் எட்டப்பட வேண்டுமென்று இந்தியா எதிர்பார்க்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசினது முடிவுகளை...

ஆதரவோ அல்லது அவர்களுக்குத் தெரியாமலோ நடைபெற எந்தச் சாத்தியக்கூறும் இல்லை.

இந்தச் சம்பவம் யுத்தநிறுத்த மீறலாகவே அமைகின்றதென்ற தலைமைப்பீடத்தின் விசனத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இச்சம்பவம் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும், நிச்சயமாக இப்படியான சம்பவங்கள் இந்த அமைதிச் சூழலை - யுத்த நிறுத்த சூழலை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியப்பாடான சூழலை குழப்பும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இச்சம்பவம் ஒரு யுத்தநிறுத்த மீறல் என்பதையும், தாங்கள் இது சம்பந்தமான தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் என்ற வகையிலும் எமது தேசியத் தலைவரிடம் தங்களுடைய தீவிர செயற்பாடுகள் தொடர்பாக அவரிடம் தெரிவிக்கும்படி கண்காணிப்புக் குழுத் தலைவர் எம்மிடம் கூறியிருக்கின்றார்.

இந்த வகையில் விசாரணை மேற்கொண்டு வருகின்றார். என்பதையும் இன்று தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

*கேள்வி:* அரச படைகள் இவற்றுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் நீங்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது நேரடியாக ஆட்சேபனை தெரிவித்திருந்தீர்களா?

*பதில்:* அரசாங்கத்திற்கும் எங்களுடைய ஆட்சேபத்தை கண்காணிப்புக் குழு ஊடாக தெரிவித்திருக்கின்றோம்.

இப்படியான சம்பவங்கள் ஒரு முழு அளவிலான யுத்தநிறுத்த மீறல் என்பதையும் யுத்தநிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துகின்ற அல்லது அமைதிச் சூழலை தொடர்ந்து பேணுகின்ற முயற்சியில் இது நிச்சயமாக ஒரு பாரிய நெருக்கடியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்கின்ற எமது தலைமைப்பீடத்தினது நிலைப்பாட்டை. அவர்களூடாக அரசிற்கு தெரிவிக்கும்படி கூறியிருக்கின்றோம்.

*கேள்வி:* ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்னர் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த காலப் பகுதியில் அந்த சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வந்த சந்திரிகா அரசாங்கம், இப்பொழுது உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வருவது எந்தளவு இதயசுத்தியுடன் நடக்குமென நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

*பதில்:* அரசு இதயசுத்தியுடன் நடக்குமா என்பதை இனி நடக்கப் போகின்ற காரியங்களை வைத்துக் கொண்டு ஆராய்வது தான் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

இதுபோன்ற சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமான விமர்சனங்களைப் பலர் செய்திருக்கின்றார்கள்.

ஆனால், இந்த புதிய சூழலில் இனி எப்படி செயற்படப் போகிறார்கள் என்பதை வைத்துக்கொண்டு தான் அந்தச் சூழலுக்கேற்ப எங்களுடைய நிலைப்பாடுகளை நாங்கள் எடுப்பது பொருத்தமாக இருக்கும்.

நாங்கள் இப்பொழுதே அது பற்றிய எதிர்வுகூறல்களை வெளிப்படுத்துவது எங்களுடைய சமாதான முன்னெடுப்புக்களுக்குப் பாதிப்புக்களை கொண்டுவரும் என்ற காரணத்தால் அதுபற்றி இப்பொழுது கூறுவது பொருத்தமில்லை என்று நினைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

### கண்காணிப்பு....

ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின்போது - அண்மைக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக புலிகளின் தலைமைப்பீடம் கொண்டிருக்கும் கரிசனைகள் குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜெனரல் புறூவ் ஹொவ்டேயிடம் விபரித்துக் கூறினார்.

ஜெனரல் புறூவ் ஹொவ்டே தலைமையிலான குழுவில் - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் - கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், ஊடகப் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர், எரிக் ஹொலென், நட் குற்டெர்சன் ஆகியோர் பங்குபற்றினா.

புதிய பிரிவு இவ்வாரம் ஆரம்பம்
Diploma in Hardware
Diploma in Network
Diploma in Auto cad
43, Thaddatheru Junction. Jaffna T.P: 222 5170

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.